
பக்கங்கள்: பன்னிரண்டு

istered as a News paper in Sri Lanka

# வலம்புரி


VALAMPURI


விலை ரூபா.7.00




சங்கு 05 | வள்ளுவர் ஆண்டு 2035 | சித்திரை 30 | புதன்கிழமை | (12-05-2004) | தொலைபேசி - 2223378 | ஒலி 145







நோர்வே அமைச்சருடன் நேற்றுச் சந்திப்பு

# புலிகள் தரப்பு நிலைப்பாட்டை தலைவர் பிரபா தெரிவித்தார்

(கிளிநொச்சி)

* நடந்து முடிந்த தேர்தலில் தமிழீழ மக்கள் வழங்கிய ஆணையின் பிரகாரம் தமிழீழ விடுதலைப் புலிகளை தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகளாக அங்கீகரித்தல்-
* இடைக்கால தன்னாட்சி நிர்வாக சபையின் அடிப்படையில் பேச்சுக்கள் முக்கியத்துவம் பெறவேண்டும்-
* முன்னர் நடைபெற்ற பேச்சுவார்த்தையின் நடைமுறைகளையொட்டியே பேச்சுக்கள் தொடரவேண்டும்-
* பேச்சுக்கள் யாவும் சர்வதேச நாடுகளிலேயே நடைபெற வேண்டும்-

இந்த வரையறைகளுக்குள் அரசு பேச்சுக்களை நடத்த முன்வருமானால் அதில் கலந்து கொள்ள விடுதலைப் புலிகள் தயாரென்று தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரன் நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜோன் பீற்றர்சன்னிடம் தெரிவித்துள்ளார்.

இடைநிறுத்தப்பட்டிருந்த அரசு-விடுதலைப் புலிகள் சமாதானப் பேச்சுவார்த்தையை மீண்டும் ஆரம்பிப்பதற்கு ஜனாதிபதியின் வேண்டுகோளைஏற்று கொழும்பு வந்திருந்த நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர் ஜோன் பீற்றர்சன் நேற்றுக் கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனைச் சந்தித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் உள்ள விடுதலைப புலிகளின் அரசியல் துறை நடுவப் பணியகத்தில் நேற்று முற்பகல் 11 மணியளவில் இடம் பெற்ற இச் சந்திப்பு சுமார் இரண்டு மணி நேரம் நீடித்தது.

விடுதலைப் புலிகளினது படையணிகளினதும், தமிழீழ காவல் துறையினரதும் கடுமையான கண்காணிப்பின் மத்தியில் இச்சந்திப்பு இடம் பெற்றது.

இச் சந்திப்பில் விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனுடன் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம், தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் ஆகியோரும் நோர்வே தரப்பில், நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜோன் பீற்றர்சன், பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெலகீசன், இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் ஹான்பிறஸ்கர் ஆகியோரும்

(12ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள்-படையினர் நேற்று மட்டக்களப்பில் சந்தித்துப் பேச்சு



(மட்டக்களப்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களின் சிறப்புத் தளபதி ரமேஷ் மற்றும் அரசியல் துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் ஆகியோருக்கும் மட்டக்களப்பு இராணுவ அதிகாரிகளுக்குமிடையிலான முக்கிய சந்திப்பொன்று மட்டக்களப்பு வவுணதீவு பிரதேச செயலகத்தில் நேற்று நடைபெற்றது.

இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் ரொான் பியுறுஹெவ்டே தலைமையில் இச் சந்திப்பு நடைபெற்றது.

(12ஆம் பக்கம் பார்க்க)

## அரசு-புலிகள் சமாதான முயற்சியில் கூடியளவு நம்பிக்கை ஏற்பட்டுள்ளது

### நோர்வே அமைச்சர் பீற்றர்சன்

(நமது நிருபர்)

இடைநிறுத்தப்பட்டிருந்த அரசு-விடுதலைப் புலிகள் சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீளவும் ஆரம்பிக்கும் நோக்கில் இலங்கை வந்த எனகது ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவை நேற்று முன்தினமும், விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனை நேற்றும் சந்தித்துப் பேசியதில் இருந்து சமாதான முயற்சிகளில் தற்போது கூடியளவு நம்பிககையை ஏற்படுத்தியுள்ளதென்று நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர் ஜோன் பீற்றர்சன் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவின் விசேட செய்தியுடன் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனை நேற்றுக் கிளிநொச்சியில் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியபின் செய்தியாளர்களுக்கு வழங்கிய பேட்டியிலேயே நோர்வேயின் வெளிவிவகார அமைசசர் ஜோன் பீற்றர்சன் மேற்கண்டவாறு நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனுடனான நேற்றைய சந்திப்பையடுத்து நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர் ஜோன் பீற்றர்சன் செய்தியாளர்களிடம் மேலும் தெரிவித்திருப்பதாவது;

சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீளவும் ஆரம்பிப்பதற்கு விடுதலைப் புலிகள் முன்வைத்திருந்த அடிப்படையான அம்சங்களில் சிலவற்றை அரச தரப்பு உத்தியோக பூர்வமாக

(12ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையின் சமாதான முயற்சிக்கு அமெரிக்கா ஆதரவு வழங்கும்

### ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் செய்தி

(கொழும்பு)

இலங்கையின் சமாதான முயற்சி குறித்து திடமான ஆதரவை தமது நிர்வாகம் வழங்குவதாக அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யு புஷ் தெரிவித்துள்ளார்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு அனுப்பிவைத்துள்ள வாழ்த்துச் செய்தியிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது;

ஜனாநாயகம், மனித உரிமை, சகல இனக் குழுக்களுக்கும் கௌரவம் என்ற அடிப்படையில் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்படுமென்பதையிட்டு அமெரிக்கா நம்பிக்கை கொண்டுள்ளது.

(12ஆம் பக்கம் பார்க்க)

## ஆந்திர மாநில தேர்தலில் காங்கிரஸ் அமோக வெற்றி

(புதுடில்லி)

நடந்து முடிந்த இந்தியாவின் ஆந்திர மாநில சட்டசபைத் தேர்தலில் சோனியா காந்தி தலைமையிலான காங்கிரஸ் கூட்டணி அமோக வெற்றியை ஈட்டியுள்ளது. இந்த வெற்றியை அடுத்து சந்திரபாபு நாயுடுவின் 9 வருட கால ஆட்சிக்கு முற்றுப புள்ளி வைக்கப்பட்டுள்ளது.

ஆந்திர மாநில சட்டசபையின் மொத்தமுள்ள தொகுதிகளில் காங்கிரஸ் கூட்டணி 226 தொகுதிகளில் பெருவெற்றி ஈட்டியுள்ளது. 9 வருடங்கள் ஆட்சியில் இருந்த தெலுங்கு தேசம்- பி.ஜே.பி. கூட்டணி 49 தொகுதிகளைக் கைப்பற்றி படு தோல்வியை சந்தித்துள்ளது. இதனை அடுத்து ஆந்திரா மாநிலத்தின் முதலமைச்சராக இருந்த சந்திரபாபுநாயுடு தனது பதவியை இராஜிநாமா செய்துள்ளார்.

(ம)

## ஒரு கோடி 70 லட்சம் ரூபா ஹெரோயின் மீட்பு

(கொழும்பு)

நீர்கொழும்புப் பகுதியில் ஒரு கோடி 70 லட்சம் ரூபா பெறுமதியான ஹெரோயின் போதைப் பொருட்களைப் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

இப் போதைப் பொருட்களை வைத்திருந்தவர்களில் ஒருவர் இந்தியப் பல்கலைக் கழகமொன்றின் மாணவரெனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

(த)

## நோர்வே வெளிவிவகார அமைச்சர் பீற்றர்சன் பிரபாவைச் சந்தித்த கையோடு ஜனாதிபதியையும் சந்தித்தார்

(கொழும்பு)

நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜோன் பீற்றர்சன் நேற்றிரவு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவைச் சந்தித்துப் பேசியுள்ளார்.

நேற்றுக் காலை கிளிநொச்சியில் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியபின் கொழும்பு திரும்பிய பீற்றர்சன் உடனடியாக ஜனாதிபதியைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

தல்லவர் பிரபாகரனுடனான சந்திப்பில் வலியுறுத்தப்பட்ட விடயங்

(12ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# நிரந்தர சமாதானத்திற்கான ஜப்பானின் பங்களிப்பை யாழ்.மக்கள் நாடி நிற்கின்றனர்

## பல்கலைக்கழகச் சமூகம் ஜப்பானியத் தூதரிடம் வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

**யாழ். குடாநாட்டில் வாழ்கின்ற மக்கள் நிரந்தர சமாதானத்தையே விரும்புகின்றார்கள் என்ற வகையில் நாட்டில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு தொடர்ந்தும் தன்னாலான பங்களிப்பை ஜப்பான் வழங்கவேண்டும். அத்துடன் இலங்கையின் நிரந்தர சமாதானத்திற்காக ஜப்பான் ஆர்வம் மிக்க தனது பங்களிப்பை செலுத்த வேண்டும்.**

இவ்வாறு யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தரும், பீடாதிபதிகளும் இணைந்து நேற்றைய தினம் யாழ்ப்பாணத்திற்கு உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு வந்திருந்த இலங்கைக்கான ஜப்பானியத் தூததர் அக்கி சூடாவிடம் வலியுறுத்தினர்.

ஜப்பானுக்கான இலங்கைத் தூதுவர் அக்கி சூடா நேற்று முற்பகல் 11.00 மணியளவில் யாழ்.பல்கலைக்கழகத்திற்கு விஜயம் செய்து பல்கலைக்கழக துணைவேந்தர் மற்றும் பீடாதிபதிகளுடன் பல்கலைக்கழகத்தின் தேவைகள், மற்றும் குடா நாட்டு மக்கள் எதிர்நோக்கு கின்ற பிரச்சினைகள் குறித்துக் கேட்டறிந்தார்.

துணைவேந்தர் சு.மோகனதாஸ் தலைமையில் நடைபெற்ற இச்சந்திப்பின்போது சி.க.சிற்றம்பலம், கலாநிதி எஸ்.சிவபாலன், குமாரவடிவேல், பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ண ஐயர் எம்.நடராஜசுந்தரம், க.இராஜதுரை ஆகியோர் கலந்துகொண்டனர்.

பேராசிரியர் மோகனதாஸ் அங்கு மேலும் கருத்துக் கூறும் போது யாழ்பாணத்தில் அமைதி நிலவினாலும் கூட குடாநாட்டு மக்களின் அடிப்படைப் பிரச்சினைகள் இன்னும் தீரவில்லை.

பல்கலைக்கழகம் வளங்கள் மிகக்குறைந்த நிலையில் தன்னாலான கல்விப் பணிகளை ஆற்றிவருகின்றது. இங்கு பல முக்கியமான தேவைகள் இன்னும் பூர்த்தி செய்யப்படவில்லை.

யாழ்.மருத்துவபீடத்தில் பல வசதியீனங்கள் இன்னமும் நிலவுகின்றன. கிளிநொச்சியில் அமைக்கப்படவுள்ள பொறியியல் பீடம், விவசாயப் பீடம் போன்றவற்றினை அபிவிருத்தி செய்ய உதவிகள் செய்யப்பட வேண்டும் என்றார்.

இதேசமயம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பட்டப்பின் படிப்புக்கள் பீடாதிபதி பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் தூதரிடம் கருத்துக்கூறும் போது,

அரசாங்கத்திற்கும் - விடுதலைப் புலிகளுக்குமிடையில் புரிந்துணர்வு உடன்படிக்கை ஏற்பட்டிருந்தாலும் கூட தெற்கில் இருக்கும் சமாதானச் சூழ்நிலை யாழ்ப்பாணத்தில் இன்னமும் இல்லை. மக்களுக்கு இன்றுதேவைப்படுவது சமாதானம் மட்டுமே. இதனை ஏற்படுத்துவதற்கு ஜப்பான் தனது பங்களிப்பை செய்ய வேண்டிய தருணம் இதுவாகும் என்றார்.

யாழ்ப்பாணத்திற்கு வந்திருந்த ஜப்பான் தூதர் நேற்றைய தினம் நல்லூரில் அமைந்துள்ள மிதிவெடி அகற்றும் நிறுவனமாகிய 'ஹலோ டிரஸ்ட்'க்கு விஜயம் செய்து மிதிவெட்டி அகற்றும் பணிகள் பற்றி நிறுவனத்தின் உயர் மட்ட அதிகாரிகளுடன் கலந்துரையாடினார்.

அதனைத் தொடர்ந்து யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு விஜயம் செய்து வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்திய நிபுணர்களுடன் வைத்தியசாலையின் தேவைகள் பற்றி விரிவாகக் கலந்துரையாடினார்.

இது இவ்விதம் இருக்க நேற்றுக் காலை விமானம் மூலம் பலாலி வந்தடைந்த ஜப்பானியத் தூதர் அக்கி சூடா பலாலி படைத் தலைமையகத்தில் யாழ்.மாவட்டத்திற்கான படைத்தளபதி மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபாலாவைச் சந்தித்து குடாநாட்டுப் பாதுகாப்பு நிலைமை பற்றி கலந்துரையாடினார் எனத் தெரியவருகின்றது.

நேற்றைய தினம் தனது யாழ்ப்பாண விஜயத்தை முடித்துக்கொண்டு தரைவழிப் பாதைவழியாக தூதர் கிளிநொச்சிக்குச் சென்றார் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். இவர் முதல் முறையாக யாழ்ப்பாணம் வந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

(உ-16,43)



யாழ்ப்பாணத்தில் உள்ள பல வீதிகளின் அபிவிருத்திப் பணிகள் வீதியோரக் கற்குவியல்களாகவே இருந்து போக்குவரத்திற்கு இடையூறு தருபவையாகள உள்ளன.
திருநெல்வேலி கிழக்கில் உள்ள செங்குந்த வீதியில் 5 மாதங்களுக்கு மேலாக குவிக்கப்பட்ட நிலையிலேயே காணப்படும் கற்குவியலையும் சீரழிந்து போய்கிடக்கும் வீதியின் தோற்றத்தையும் படத்தில் காணலாம்.
படம்: க.பவன்

## நிவாரணம் நிறுத்தப்பட்ட மக்களுக்காக கூட்டமைப்பினர் குரல் கொடுப்பர்

(திருநெல்வேலி)

வடக்கு, கிழக்கு வாழ் மக்களுக்கான உலர் உணவு நிவாரணம் நிறுத்தப்பட்டமை தொடர்பில் யாழ்.மாவட்ட கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் கண்டனம் வெளியிட்டுள்ளனர்.

மீள் குடியமர்வுக் கொடுப்பனவான 25 ஆயிரம் ரூபா வழங்கப்பட்வர்களுக்கான உலர் உணவு நிவாரணம் நிறுத்தப்பட்டமை தொடர்பில் அடுத்தமுறை பாராளுமன்றத்தில் ஜனாதிபதியிடம் பிரஸ்தாபிக்க உள்ளதாகத் தெரிவித்துள்ள இந்த எம்.பிக்கள் மேலும் கூறுகையில்,

உலர் உணவு நிவாரணம நிறுத்தப்பட்டமையானது எமது மக்களின் வாழ்வோடு விளையாடுவதாக உள்ளது. நிவாரணம் நிறுத்தப்பட்ட மக்களது விபரங்களை யாழ்.அரசாங்க அதிபருடாகத் திரட்டி அந்த விபரங்களுடன் சென்று ஜனாதிபதியை சந்தித்துப் பேசி இது விடயத்தை சுமுகமாகத தீர்க்கவுள்ளோம்.

வடக்கு, கிழக்கில் இயல்பு வாழ்வு திரும்பும் மட்டும் மக்களுக்கான உலர் உணவு நிவாரணத்தை நிறுத்துவது முறையற்றது என்பதை ஜனாதிபதியிடம் வலியுறுத்தத் திட்டமிட்டுள்ளோம்.

இதேவேளை, ஏ-9 பாதையூடாக வந்து மீளக் குடியமர்ந்த மக்களுக்கான ஒரு இலட்சம் ரூபாவைப் பெற்றுக் கொடுக்கவும் நடவடிக்கை எடுக்கவுள்ளோம்.

(உ-63)

## ஆய்வுப் பட்டறை

(யாழ்ப்பாணம்)

கொழும்பைத் தலைமையகமாகக் கொண்டு இயங்கும் மதங்களுக்கு இடையிலான சமாதான நிதியத்தின் ஏற்பாட்டில் மனிதருக்கு எதிரான மிதிவெடிகளைத் தடைசெய்தல் தொடர்பான ஆய்வுப் பட்டறை ஒன்று எதிர்வரும் 15ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு முத்திரைச் சந்தியில் உள்ள வர்த்தக சம்மேளன கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

இதில் கருத்துரைகளை வழங்க கொழும்பிலிருந்து 10 பேர் இங்கு வருகைதரவுள்ளனர்.

(உ-16)


## FACULTY OF SCIENCE UNIVERSITY OF JAFFNA NOTICE

**FIRST SECOND AND THIRD EXAMINATIONS IN SCIENCE, 2004 (FIRST SEMESTER)**

The above examinations will commence on the date given below

*First Examination in science - 2004 (Repeat) 21.06.2004*
*Second Examination in science - 2004 &2004 (A) 28.06.2004*
*Third Examination in science - 2004 06.07.2004.*

**Examinations on the following course units will also be conducted for Repeat circles on the dates given below.**

| | | |
|---|---|---|
| 14.06.2004 | MAG 22 | Linear Programming |
| 15.06.2004 | MPG 24 | Metric Spaces |
| 16.06.2004 | CHG 21 | Physical Chemistry II |
| 17.06.2004 | CHG 33 | Organic Chemistry III |

Applications are kindly requested to hand over their examination entry forms together with the receipt of the payment (Rs 50/=) on or before 28.05.2004.

**Examination entry forms could be obtained from the office of the Dean, Faculty of Science. The Examination Time - Table will be displayed on the Notice Boards.**

(C-172)

# தரம்-5 புலமைப்பரிசில் பயிற்சி வினாத்தாள்

இல:03 ஆக்கம்: சுந்தர் வெளியீடு


**♦ தரப்பட்டுள்ள அறிவுறுத்தலின்படி எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.**


**♦ சரியான விடைக்குரிய இலக்கத்தைத் தெரிவு செய்து புள்ளிக் கோட்டில் எழுதுக.**


01. குறிப்பிட்ட ஒரு ஒழுங்கில் எழுதப்பட்டுள்ள இவ்வெழுத்துத் தொடரில் அடுத்து வரவேண்டிய எழுத்து.

ப, பி, பு, பெ


1.பா 2.பூ 3. பை 4. பே (........)

02. 


03. 


04. 


05. கீழ்வரும் உருக்களில் ஒரே மாதிரியான உருக்கள் இரண்டு உண்டு. அவற்றின் கீழ் கோடிடுக.




06. கீழே நால்வரின் பெயர்கள் உண்டு. இவற்றில் ஒரு பெயர் உச்சரிப்பில் வேறுபடுகின்றது. அதன் கீழ் கோடிடுக.
1. சுந்து 2. பிந்து 3. நந்து 4. சாந்து


07. கனவுரு ஒன்றை அமைக்க 12 ஈர்க்குகள் தேவை எனின், சதுரமுகி ஒன்றை அமைக்க எத்தனை ஈர்க்குகள் தேவை?
1. 12 2. 06 3. பல 4. 04

08. நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை ஆயின் நேற்று என்ன கிழமை?
1.வெள்ளி 2. சனி 3. வியாழன் 4. புதன்

09. கீழ்வரும் பாடங்களின் பெயர்களில், எழுத்துக்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் வேறுபடும் பாடம்.
1. கணிதம் 2. ஆங்கிலம் 3. சுற்றாடல் 4. விஞ்ஞானம்

10. கருத்துள்ள ஓரெழுத்தாலான சொல்
1. இ 2. ஈ 3. உ 4. அ

11. நிழற்படுத்தப்பட்டுள்ள அளவின் அடிப்படையில் வித்தியாசமானது.




12. "சூரியன் கிழக்கே உதிக்கும்" என்னும் நிகழ்வு
1. எப்போதும் நிகழும் 2. ஒரு போதும் நிகழாது.
3. சிலவேளை நிகழும் 4. கூறமுடியாது.

13 . பொதுவாக மாணவர்கள் உறங்கும் வேளை
1. காலை 2. மாலை 3. இரவு 4. விரும்பிய வேளை

14. வீதியோரம் முச்சக்கர வண்டியில் இருந்த குமாருக்கு அவ்வீதியால் சென்ற தயாபரன் ரூபா 1.00 இனை கொடுத்துச் சென்றார். இதன் மூலம் நாம் விளங்குவது.
1.. தயாபரன், தான் குமாரிடம் பட்ட கடனைத் திருப்பிக் கொடுத்தார்.
2. தயாபரன் குமாருக்குக் கடன் கொடுத்தார்.
3. தயாபரன் குமார் மீதான இரக்கத்தால் பணம் கொடுத்தார்.

**♦ சரியான விடையைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**

15. இலங்கை நாட்டின் காசுத் தாளில் எழுதப்பட்டுள்ள வங்கியின் பெயரை எழுதுக.
(.........................................................................................)


16. 100g சீனி ரூபா 6.00 எனில் 350g சீனியின் விலை என்ன? (...............)

17. 250 ml தேங்காய் எண்ணெய் ரூபா 15.00 எனின் 1250ml தேங்காய் எண்ணெயின் விலை யாது? (...............)

18. 

இவ்வுருவுடன் பொருந்தக்கூடிய நேரம் (காலை 6.00 மணி, பிற்பகல் 2.30, மாலை 6.00 மணி, இரவு 8.00 மணி)

(...............)

19. 



**♦ கீழே சில மாணவர்களின் வயது, உயரம், விரும்பும் உணவு என்பன தரப்பட்டுள்ளன. இவற்றை நன்கு அவதானித்து விடை எழுதுக.**


| பெயர் | வயது | உயரம் | காலை உணவு |
|---|---|---|---|
| பிரணவன் | 9ஆண்டு 24 நாட்கள் | 94cm | பாண், முட்டை |
| சிறிவரன் | 9ஆண்டு 04 மாதம் | 103cm | இடியப்பம், சொதி |
| அருண்யா | 8ஆண்டு 05 மாதம் | 92cm | தோசை, சம்பல் |
| சாம்பவி | 9ஆண்டு 11 மாதம் | 89cm | பிட்டு, பருப்புக்கறி |
| ரேவதி | 8ஆண்டு 09 மாதம் | 100cm | பாண், முட்டை |

20. உயரம் கூடிய மாணவர் பெயரை எழுதுக. (...............................)
21. வயது குறைந்த மாணவர் பெயரை எழுதுக. (...............................)
22. ஆண் பிள்ளைகளில் வயது குறைந்தவரின் பெரை எழுதுக. (.....................)
23. ஒரே உணவை விரும்பும் மாணவர் எண்ணிக்கையை எழுதுக. (..................)
24. உயர வித்தியாசம் சமனாய் அமையும் இரு மாணவச் சோடிகளின் பெயர்களை எழுதுக.
1. ............................................. 2. ...............................................


**♦ கீழே சில சொற்கள் தரப்படுகின்றன. அவற்றுள் ஒன்று ஏனையவற்றில் இருந்து வேறுபடுகின்றது. வேறுபாடான சொல்லின் கீழ் கோடிடுக.**


25. 1) ஓடுதல் 2) ஆடுதல் 3) பாய்தல் 4) உறங்குதல்
26. 1) ஆ 2) ஈ 3) ஈகை 4) கை
27. 1) தமிழ் 2) சமயம் 3) ஆங்கிலம் 4) சிங்களம்
28. 1) கார் 2) விமானம் 3) பொதிஉந்து 4) பேருந்து
29. 1) வாழை 2) தென்னை 3) பலா 4) பனை


30. 


31. 



32. 


33. 


34. 


35. 


**♦ கீழே தரப்பட்டுள்ள படங்களுள் முதல் இரு படங்களுக்கிடையேயுள்ள கோலத்தை நன்கு அவதானித்து, நான்காவதாக வரவேண்டிய படத்தைத் தரப்பட்டுள்ளவற்றில் இருந்து தெரிவு செய்க.**




## 5ம் தர புலமைப் பரீட்சை வினாத்தாள் -01

மாணவர் முழுப்பெயர்: ....................................

பாடசாலை முகவரி : ....................................

வீட்டின் முகவரி : ....................................

மாணவர்களே! உங்கள் விடைகளை 17.05.2004 இற்கு முன் அனுப்பி வைக்கவும். உங்கள் விடைகளுடன் கூப்பனையும் வெட்டி இணைக்கவும்.

வலம்புரி
கல்விப்பகுதி,
15, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.

குறிப்பு :- மாணவர்களின் நலன்கருதி இவ் வினாத்தாள்களை வைத்துக்கொண்டு, வினாக்களுக்கான விடைகளை வேறு ஒரு தாளில் எழுதி கூப்பனுடன் சேர்த்து அனுப்பவும். வினா இலக்கங்களை சரியாகக் குறிப்பிடவும். பாடசாலையின் பெயரினை முழுமையாக எழுதவும்.

# முன்னாள் சமுர்த்தி அமைச்சர்மீது நிதி மோசடிக்கு குற்றச்சாட்டு

(கொழும்பு)

முன்னாள் சமுர்த்தி அமைச்சினால் பல பில்லியன் ரூபாக்கள் மோசடி செய்யப்பட்டுள்ளது என ஜனாதிபதி குற்றஞ்சாட்டியுள்ளார்.

கிட்டத்தட்ட 9பில்லியன் ரூபா சமுர்த்தி அதிகாரிகளின் தனிப்பட்ட கணக்கு வைப்புக்களில் இடப்பட்டுள்ளது. 3பில்லியன் ரூபா தவறாக துஷ்பிரயோகம் செய்யப்பட்டுள்ளதுடன், பல தனியார் நிறுவனங்களில் பங்குகள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன என்ற இத தகவலை ஜனாதிபதி செயலகம் வெளியிட்டுள்ளது.

அத்துடன், இதற்கு பொறுப்பானவர்களுக்கு எதிராக தான் நடவடிக்கை எடுக்க விருப்பதாகவும் ஜனாதிபதி கடுமையாக அறிவித்துள்ளார்.

மேலும், சமுர்த்தி அலுவலகங்களைக் குறைகக வேண்டும் என்றும் ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார்.

சமுர்ததி அமைச்சில் இடம்பெற்ற இப்பாரிய மோசடி தற்போதைய சமுர்த்தி அமைச்சர் பவித்ரா வன்னியராய்ச்சினால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

1995இல் பொ.ஐ.மு.அரசினால் 1.8மில்லியன் வறிய மக்களுக்கு 12பில்லியன் ரூபாக்கள் ஒதுக்கப்பட்டிருந்தமை தெரிந்ததே.

(உ-6)

## நொத்தாரிசு ஆரம்பப் பரீட்சையில் சித்தி பெற்றோர்

(யாழ்ப்பாணம்)

கடந்த 2002ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் நடாத்தப்பட்ட நொததாரிசு ஆரம்பப் பரீட்சையின் பெறுபேறுகள் வெளியிடப்பட்டுள்ளன.

இதன்படி, நொத்தாரிசுப்பதவிக்கு தகைமை பெறுவதற்காக பயிலுநர் எழுதுநர்களாக சேர்த்துக்கொள்வதற்கு 200பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் 16 தமிழர்கள் அடங்குகின்றனர்.

தகைமை பெற்ற தமிழர்களின் பெயர்கள் வருமாறு,

கே.கணேசவேல், எஸ்.கோபாலபிள்ளை, எஸ்.இளங்கீரன், எஸ் ஜீனேந்திரகுமார்,கே.முருகேசு,எஸ்.முத்துக்குமாரசாமி,பி.நடராசா,எஸ்.நமசிவாயம்,எஸ்.பிரியதர்ஷினி,என்.ஐ.சதாசிவஐயர்,கே.ஸ்ரீரங்கன், வி.சிவசுப்பிரமணியம், எஸ்.திருநாவுக்கரசு, கே.திருவருள், எம்.ரி. உதயகுமாரன், கே.வேதநாயகம்.

(உ)

## தருமபுரம் ஆஸ்பத்திரியில் மருந்துகளுக்குத் தட்டுப்பாடு

(மருதங்கேணி)

தருமபுரம் மருத்துவமனையில் மருந்து வகைகளுக்குத் தட்டுப்பாடு நிலவுவதாக நோயாளர்கள் தரப்பில் அதிருப்தி தெரிவிக்கப்படுகிறது.

தருமபுரம் வைத்தியசாலைக்கு சிகிச்சைபெறச் செல்கின்ற நோயாளர்களுககு மருத்துவனையில் மருந்து இல்லாத காரணத்தால், மருந்துகளை வெளிக்கடையில் பெற்றுக் கொள்ளுமாறு எழுதிக் கொடுக்கப்படுகிறது.

மருந்துகள் சீரானமுறையில் அனுப்பப்படாமையே இதற்குக் காரணம் என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

குறிப்பாக காய்ச்சல் மற்றும் விசர் நாயககடி மருந்துகள் உட்பட பல்வேறு மருந்துகளுக்கும் இங்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

(உ-35)

## மேல் கொத்மலைத் திட்டத்தை எதிர்த்து ஆர்ப்பாட்டம்

(தலவாக்கொல்லை)

மேல் கொத்மலைத் திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து தலவாக்கொல்லையில் கடந்த ஞாயிற்றுக்கிமை எதிர்ப்புப் போராட்டம் ஒன்று இடம் பெற்றுள்ளது.

மேற்படி கொத்மலை நீர் த் தேக்கமானது நுவரெலியா மாவட்டத்திலுள்ள தமிழர்களின் இருப்பை கேள்விக்குறியாக்கியுள்ளது என்பதைச் சுட்டிக்காட்டியே எதிர்ப்புப் போராட்டமும் பேரணியும் கூட்டமும் நடைபெற்றது.

இவ் எதிர்ப்பு ஆர்ப்பாட்டப் பேரணியிலும்,கூட்டத்திலும் 5ஆயிரத்திற்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் கலந்து கொண்டனர்.

மேல் கொத்மலைத் திட்டத்தைத் தடுத்து நிறுத்த தமிழ் தேசியக் கூட்டமைப்பு முன்வர வேண்டு என்றும் இதில் கோரிக்கை விடுக்கப்பட்டது.

(உ-121)

## வராத்துப் பளையில் மிதிவெடி அகற்றப்பட்ட பிரதேசம் கையளிப்பு

(யாழ்ப்பாணம்)

வடமராட்சியின் வராத்துப் பளை மக்கள் குடியிருப்புப் பிரதேசத்தில் டனிஷ் கண்ணிவெடி அகற்றும் பிரிவினால் மிதிவெடி அகற்றப்பட்ட பிரதேசம் நேற்று முன்தினம் பருத்தித்துறை பிரதேச செயலக அபிவிருத்தி இணைப்பாளர் ராஜ்குமாரிடம் கையளிக்கப்பட்டது.

கடந்த பெப்ரவரி மாதம் 8ஆம் திகதி முதல் கடந்த மாதம் 30 திகதி வரை இப் பிரதேசத்தில் இடம்பெற்ற மிதிவெடி அகற்றும் பணியின் போது 11ஆயிரத்து 886 சதுர மீற்றர் பரப்பளவில் இருந்து 387மிதி வெடிகள் அகற்றப்பட்டன.

இந்தக் கையளிப்பு நிகழ்வில் யாழ்.மாவட்ட மிதிவெடி செயற்பாட்டு அலுவலக இணைப்பாளர் ம.செந்தில்குமார், டனிஷ் நிறுவனத்தின் நடவடிக்கைச் செயற்பாட்டுப் பொறுப்பாளர் சாமுவேல் பொனிலா ஆகியோரும் கலந்து கொண்டனர்.

(உ)

## பயன்படுத்தமுடியாத நிலையில் முள்ளியவளை ஆஸ்பத்திரி

(மருதங்கேணி)

முள்ளியவளை கிராமிய வைத்தியசாலை எவ்வித அடிபபடை வசதிகளும் அற்றநிலையில் இயங்கி வருகிறது.

1948ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இவ் மருத்துவமனை எவ்விதமான வசதிகளும் அற்ற நிலையில இயங்கிவருகின்றமையால் இப்பகுதி மக்கள் பெரும் இன்னல்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

56ஆண்டுகள் பூர்த்தியடைந்துள்ள இந்த வைத்தியசாலை மிகவும் மோசமாகச் சேதமடைந்துள்ளதுடன், சுவர்களில் பாரிய வெடிப்புக்கள் ஏற்பட்டு கூரையை தாங்கி நிற்கும் தீராந்திகளிலும் வெடிப்புக்களும் சிதைவுகளும் காணப்படுகின்றன.

கூரை பழுதடைந்ததால் மழை நீா உட்புகுந்து மருத்துவமனையை பாவிக்கமுடியாத நிலையில் உள்ளது.

இதேவேளை, இதனைப் பார்வையிட்ட பொறியியலாளர்கள் திருத்த முடியாததெனவும் இதற்கு பதிலாக புதிய கட்டடம் அமைக்கவேண்டுமெனவும் கூறியிருந்தார்கள்.

ஆனால் திருத்தப் பணிக்காக ஒன்றேகால் இலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்ற போதும் சாதாரணமாக இந்தக் கட்டடத்தை புனரமைப்புச்செய்வதற்கு நாலரை இலட்சத்திற்கும் அதிகமான பணம் தேவைப்படும் நிலையில் ஒன்றேகால் இலட்சம் ரூபா பணத்தை வைத்துககொண்டு என்ன செய்ய முடியுமென வைத்தியசாலை அதிகாரி எஸ்.இராசதுரை கேள்வியெ ழுப்பியுள்ளார்.

அத்துடன், இங்கு மருந்துத் தட்டுப்பாடு நிலவிவருகிறது. ஒழுங்கானமுறையில் மருந்துகள் வழங்கப்படுவதில்லை. அவசர நோயாளர்களை புதுக்குடியிருப்பு வைத்தியசாலைக்கோ, முல்லைத்தீவு வைத்தியசாலைக்கோ அனுப்புவதற்கு அப்புலன்ஸ் வண்டியிலலை. இதனால் நோயாளர் அதிகப்பணத்தை செலவிட்டு தனியார் வாகனங்களில் கொண்டுசெல்லவேண்டியுள்ளது.

இவ் மருத்துவமனையில் கிட்டத்தட்ட175-200க்கும் இடைப்பட்ட நோயாளாகள் தினமும் சிகிச்சைக்காக வருகின்றனர்.

(உ-35)

## யாழ்.சிறையில் பணியாற்றும் சிங்களக் காவலர்களால் கைதிகளுக்கு நெருக்கடி

(திருநெல்வேலி)

யாழ்.சிறைச்சாலையில் பெரும் இடநெருக்கடி தோன்றியுள்ளதாக தெரியவருகிறது.

அண்மைக் காலமாக யாழ்.குடாநாட்டில் குற்றச் செயல்கள் அதிகரித்து வருகின்றன.இதனால் சிறைச்சாலையில் கைதிகளின் தொகை அதிகரித்து வந்தாலும் இதற்கேற்ப இங்கு இடவசதிகள் காணப்படாமையினாலேயே இந் நெருக்கடி நிலை தோன்றியுள்ளது.

இதைவிட இங்கு குடிநீா மற்றும் அடிப்படைச் சுகாதார வசதிகள் என்பன குறைவாகவே காணப்படுவதனால், கைதிகளுக்குத் தொற்று நோய்கள் பரவக்கூடிய அபாயமும் தோன்றியுள்ளது.

இதேவேளை, இச் சிறைச்சாலையில் கடமையாற்றிவரும் சிங்கள சிறைக்காவலர்கள் கைதிகளைத் துன்புறுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதாகவும் குற்றஞ் சாட்டப்பட்டு வருகின்றது.

(உ-43)

# செய்தித் துளிகள்

## ஆட்டோக்களில் கசிப்பு விற்பனை

(கோப்பாய்)

கோப்பாய் பகுதியில் சட்ட விரோதமாக உற்பத்தி செய்யப்படும் கசிப்பை வேறு இடங்களில் விற்பனை செய்வதற்கு தற்போது ஆட்டோகள் பயன்படுத்தப்படுகின்றன.

சோடாப போத்தல்களில் கசிப்பு அடைக்கப்பட்டு, புதிய சோடா சுட்டுத்துண்டுகள் ஒட்டப்பட்டுத தந்திரமானமுறையில் ஆட்டோக்களில் கொண்டுசெல்லப்படுவதாக அறியப்படுகிறது.

(உ-79)

## கூட்டம்

(பொன்னாலை)

அராலி மததி-குழுக்கன் குளம் நாச்சிமார் ஆலய மாதாந்த நிர்வாக சபைக் கூட்டம் நாளை வியாழக்கிழமை மாலை 5.30மணிக்கு ஆலய வளாக முன்றிலில் அதன் தலைவர் த.பிரபாகரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

(உ-49)

## கட்டாக்காலி நாய்கள் அழிப்பு

(பொன்னாலை)

வலி.தென்மேற்குப் பிரதேச சபை தம்து பகுதிக்குட்பட்ட கட்டாக்காலி நாய்களை அழிக்க நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்த வகையில் ஆணைக்கோட்டை குழாவடி, மானிப்பாய் ஆகிய பகுதிகளில் திரியும் கட்டாக்காலி நாய்களை அழிக்கத் தற்போது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவருகின்றன.

மேற்படி நடவடிக்கைக்கு ஒத்துழைபபு வழங்கும் முகமாக, தமது வளர்ப்பு நாய்களை கட்டிவைக்குமாறு பொது மக்களுக்கு மானிப்பாய் பொதுச் சுகாதார பரிசோதகர் அறிவித்துள்ளார்.

(உ-49)

## கொடியேற்றம்

(பொன்னாலை)

சுழிபுரம்-பறாளாய் முருகமூர்த்தி ஆலய வருடாந்த மகோற்சவம் எதிர்வரும் 21ஆம் திகதி வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

12நாட்கள் நடைபெறவுள்ள இம் மகோற்சவததில் 11ஆம் நாள் தேர்த்திருவிழாவும், மறுநாள் தீர்த்தத்திருவிழாவும் நடைபெறவுள்ளது.

(உ-49)

## பெருமளவு போதைப்பொருள் மீட்பு

(மாரவில)

மாரவிலப் பகுதியில பெருந்தொகையான ஹெரோயின் போதைப்பொருள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த நபர் ஒருவரிடம் இருநது 9கிலோ கிராம் எடையுள்ள ஹெரோயின் போதைப்பொருள் நேற்று முன்தினம் மாரவிலப் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டதுடன் அதனைக் கொண்டுசென்ற நபரும் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

வெளிநாடுகளில் இருந்து கடல் மார்க்கமாக கடத்தி வரப்பட்ட போதைப் பொருட்களே இவை என பொலிஸார் உறுதிசெய்துள்ளனர்.

(உ-41,63)

## கட்டாக்காலிகள் தொல்லை

(பொன்னாலை)

அராலிப் பகுதியில் கட்டாக்காலி ஆடு, மாடுகளின் தொல்லை அதிகரித்து வருவதாக அப்பகுதி விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

மேற்படி பகுதியில் கிணற்று நீரை நம்பிக் கோடைப் பயிர்ச் செய்கையை மேற்கொண்டிருந்த விவசாயிகள் பலரும் அண்மையில் பெய்த கடும் மழையால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள அதே நேரம், கட்டாக்காலி கால்நடைகளினாலும் அவர்கள் பெரிதும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

(உ-49)

## வெளிவாரி மாணவர்கள் அதிருப்தி

(ஊர்காவற்றுறை)

யாழ்.பல்கலைக்கழக வெளிவாரிப் பிரிவிற்கான பட்டப் படிப்பு பரீட்சைகள் உரிய காலத்தில் இடம்பெறுவதில்லையென மாணவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

கடந்த வருடம் இடம்பெறவேண்டிய பரீட்சைகள் நடாத்தப்படாமல் இருக்கின்றதுடன், அதைவிட இவ் வருடம் நடத்தப்படவேண்டிய பரீட்சைகளும் நடத்தப்படாது காலம் தாழ்த்தப்பட்டு வருவதாகத் தெரியவருகின்றது.

இதேவேளை, உள்வாரியான மாணவர்களுக்கு பரீடசைகள் ஒழுங்காக இடம்பெற்றுவருகின் போதும் வெளிவாரியான மாணவர்களின் பரீட்சைகளை நடாத்தாது காலம் தாழ்ததுவது குறித்து மாணவர்கள் மத்தியில் அதிருப்தி தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன், உள்வாரி மாணவர்கள் 4வருடத்தில் பட்டம்பெற்று வெளியேறும் அதேவேளை, ஒரே கல்வியாண்டு வெளிவாரிமாணவர்கள் பட்டம் பெறுவதற்கு 6வருடங்களுக்கு மேல் செல்வதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

(உ-75)

## யாழ்ப்பாணத்திற்கு இறைச்சி க்டத்தல்

(மண்கும்பான்)

சட்டவிரோதமாக இறைச்சிக்கு மாடு வெட்டப்படும் சம்பவங்கள் மண்கும்பானில் மீண்டும் தலை தூக்கியுள்ளன.

களவாகப் பிடிக்கப்படும் மாடுகள் உடனடியாகவே இரவோடு இராவாக இறைச்சிக்காக வெட்டப்பட்டு, இறைச்சி கடலூடாக யாழ்ப்பாணததிற்குக் கடத்தப்படுவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதன்போது பசுமாடுகளும் இறைச்சிக்காக வெட்டப்படுகின்றதாகச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

(உ-56)

## ஊடகவியலாளர்களுடனான கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மனித உரிமைகள் ஆணைக்குழுவின், உள்ளக இடம்பெயர்ந்தோருக்கான தேசிய பாதுகாப்பிற்கும் நிலையான தீர்விற்குமான விசேட செயற்றிட்டத்தினால் 'அடிபபடை மனித உரிமைகளும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் செயற்பாடுகளும் என்ற தலைப்பில் கலந்துரையாடல் ஒன்று யாழ்ப்பாண ஊடகவியலாளர்களுக்கு நடாத்தப்படவுள்ளது.

இன்று பி.ப.4.00மணிக்கு யாழ்.நாவலர் கலாசார மண்டபத்தில் இடம்பெறவுள்ள இந்தக் கலந்துரையாடலில் இச் செயற்றிட்ட இணைப்பாளரான சேனக திஸாநாயக்காவும் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.பிராந்திய இணைப்பாளர் ஆர்.பி.சந்திரசேகரவும் கருத்துரைகளை வழங்கவுள்ளனர்.

(உ)

## அலங்கார உற்சவம்

(பொன்னாலை)

அராலி கிழக்கு-அவரம்பிட்டி ஸ்ரீமுத்துமாரி அம்பாள் ஆலயத்தின் வருடந்த அலங்கார உற்சவம் எதிர்வரும் 28ஆம் திகதி வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 9தினங்கள் உற்சவம் நடைபெற்று, எதிர்வரும் 5 ஆம் திகதி சனிக்கிழமை பொங்கலுடன் உற்சவம் நிறைவடையவுள்ளது.(உ-49)

## மண்கும்பானில் பயிர் அழிவு

(மண்கும்பான்)

அண்மையில் பெய்த மழையினால் மண்கும்பான் விவசாயிகள் பெருத்த நட்டத்தை எதிர்நோக்கியுள்ளனர்.

கடுமையான வெய்யிலில் பின்னர் பெய்த இம் மழையினால், அங்கு செய்கை பண்ணப்பட்ட பயிர்கள் பலவும் அழிவடைந்துள்ளன. இதேவேளை, தமக்கு பயிரழிவு நட்டஈடு வழங்கப்படவேண்டும் எனவும் சம்பந்தப்பட்ட விவசாயிகளால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

(உ-56)

# சாத்தூர் அருகே தேர்தல் வன்முறை துப்பாக்கிச் சூடு, அரிவாள் வெட்டு

(மதுரை)
விருதுநகர் மாவட்டம், சிவகாசி மக்களவைத் தொகுதியில் சாத்தூர் அருகே தேர்தல் பிரச்சினையில் துப்பாக்கிச் சூடு, அரிவாள் வெட்டுச் சம்பவங்கள் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றன.

தேர்தல் பணிக்குச் சென்ற என்னை அரிவாளால் வெட்டினார்கள் என்று அமைச்சர் இன்பத் தமிழனும், அமைச்சர் தான் என்னைத் துப்பாக்கியால் சுட்டார் என்று ம.தி.மு.க.வேட்பாளர் ரவிச்சந்திரனும் சாத்தூர் காவல் நிலையத்தல் புகார் செய்துள்ளனர். மேலும், இச்சம்பவத்தில் காயமடைந்ததாக இருதரப்பினரும் தத்தம் புகாரில் கூறியுள்ளனர்.

ம.தி.மு.க.வேட்பாளர் சிப்பிப் பாறை ரவிச்சந்திரன் கூறியதாவது;

தேர்தல் வாக்குப் பதிவைப் பார்வையிடுவதற்காக விருதுநகரிலிருந்து சாத்தூருக்கு கடந்த திங்கட்கிழமை சென்று கொண்டிருந்தேன்,ஆர்.ஆர்.புரம் அருகே செல்லும் போது அமைச்சர் இன்பத் தமிழனின் கார் என்னுடைய காரை பின்தொடர்ந்து விரைந்து வருவதைப் பார்த்தேன். இதையடுத்து, எனது டிரைவரும் விரைந்து சென்றார்.

இருப்பினும்,அமைச்சரின் கார் 100 கி.மீ.வேகத்தில் விரைந்து வந்து வெங்கடாசலபுரம் பாலம் அருகே எனது காரை மறித்து நின்றது.அதிலிருந்து இறங்கிய அமைச்சர் என்னை நோக்கித் திட்டியவாறு துப்பாக்கியால் சுட ஆரம்பித்தார். இதனால் உயிர் தப்பி நான் ஓடினேன்.ஒரு துப்பாக்கி குண்டு எனது தோள் பட்டையை உரசிச் சென்றது.

5,6 முறை என்னை நோக்கி அமைச்சர் சுட்டிருக்ககூடும். துப்பாக்கி சூட்டிலிருந்து நூலிழையில் நான் தப்பிய போதிலும் எனது கார் டிரைவர் சங்கர நாராயணன் காயமடைந்தார்.

இதைப் பார்த்த வெங்கடாசலபுர கிராமத்தினர் அங்கு ஓடிவந்தனர்.உடனே அமைச்சரும் அவருடன் வந்தவர்களும் ஓடிவிட்டனர் என்றார்.

இந்நிலையில் தலைக் காயத்துடன் சாத்தூர் அரசு மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ள தமிழக விளையாட்டுத் துறை அமைச்சர் இன்பத் தமிழன் நிருபர்களிடம் கூறியதாவது; ம.தி.மு.க. வேட்பாளர் சிப்பிப்பாறை ரவிச்சந்திரனின் குற்றச்சாட்டு முற்றிலும் தவறானது.வாக்குப் பதிவின் போது பிரச்சினை ஏற்பட்டதாகக் கிடைத்த தகவலை அடுத்து சாத்தூர் சாலையில் சென்று கொண்டிருந்தேன். வெங்கடாசலபுரம் அருகே சென்ற போது ம.தி.மு.க. வேட்பாளர் ரவிச்சந்திரன் தலைமையில் நூறு பேர் கொண்ட ஒரு கும்பல் நாங்கள் சென்ற காரை மறித்து கார் கண்ணாடிகளை உடைத்தனர்.

எனது கையைப் பிடித்துக் கொண்டு நெற்றியில் வெட்டினார். மேலும் நாடார்களுக்கு எதுக்கு அரசியல்...? போய் வியாபாரத்தைப் பாரு...என்று கூச்சலிட்டனர். அக்கும்பல் நடத்திய தாக்குதலில் எனது பாதுகாவலர் ராஜாராம், டிரைவர் சிவப்பிரகாசம் ஆகியோருக்கும் காயம் ஏற்பட்டது. மேலும் எனது கழுத்தை வெட்டுவதற்கு வந்தபோதுதான் எனது பாதுகாவலர் (பி.எஸ்.ஓ.) வானை நோக்கிச் சுட்டார்.உடனே அக்கும்பல் ஓடிவிட்டது.

தமிழகத்தை அமைதிப் பூங்காவாக ஆக்க முதல்வர் ஜெயலலிதா அனைத்து முயற்சிகளும் மேற்கொண்டுவருகிறார்.ஆனால் வன்முறைக் கலாசாரத்தை ம.தி.மு.க. பொதுச் செயலர் வைகோ புகுத்துகிறார்.தேர்தலில் கூட கூலிப்படைகளை இறக்கியுள்ளார். அவர்கள் விடுதலைப் புலிகள் ஆதராவளர்களாகக் கூட இருக்கலாம்.

இச்சம்பவத்தை அடுத்து சாத்தூரில் கடைகள் அடைக்கப்பட்டன.தகவல் அறிந்த ம.தி.மு.க. பொதுச் செயலர் வைகோ சம்பவ இடத்துக்குச் சென்று பார்வையிட்டு,கிராமப் பொது மக்களிடமும் பேசினார். (து)



யூனியன் பிரதேசமான புதுவையில் நேற்றுமுன்தினம் மக்களவை வாக்குப்பதிவு நடைபெற்றது.புதுவையின் ஒரேயொரு தொகுதியில் நடைபெற்ற வாக்குப் பதிவில் தங்களது வாக்குகளை செலுத்த வரிசையில் காத்திருந்த பெண்கள்.

# வாக்காளர் பட்டியல் தயாரிப்பில் குறைபாடு

மக்களவைத் தேர்தல் பற்றி வெளியான கருத்துக் கணிப்புச் சம்பந்தமாக தேர்தல் முடிவுகள் வந்தபிறகே தான் கருத்துச் சொல்ல முடியுமென தமிழ்நாடு முதலமைச்சரும் அ.இ.அ.தி.மு.க. பொதுச் செயலாளருமான ஜெயலலிதா கூறியிருக்கிறார்.

சென்னையில் தான் வாக்களித்த வாக்குச்சாவடியில் பல வாக்காளர்களின் பெயர்கள் வாக்காளர் பட்டியலில் விடுபட்டுப் போயிருந்ததாக அவர் கூறினார்.

இதேபோன்ற புகார்கள் பல இடங்களிலுமிருந்து தனக்கு வந்திருப்பதாகக் கூறிய அவர், இதுபற்றி மாநிலத் தலைமைத் தேர்தல் அதிகாரியிடம் முறையிடப் போவதாகத் தொவித்தார்.

வாக்காளர் பட்டியல் தயாரிப்பது மாநில அரசின் கையில் இல்லை என்றும், அது தலைமைத் தேர்தல் அதிகாரியின் பொறுப்பு என்றும் முதலமைச்சர் தெரிவித்தார் (து)

# தமிழ் நாட்டின் தேர்தல் முடிவுகள் நாளை பகல் வெளியாகும்

(சென்னை)
தமிழ்நாட்டில் நேற்று முன்தினம் நடைபெற்ற மக்களவைத் தேர்தலில் சுமார் 55 முதல் 60 சத வீதமான வாக்காளர்கள் வாக்களித்துள்ளார்கள்.

நேற்று முன்தினம் சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய தமிழக தலைமை அதிகாரி சாரங்கி, தேர்தல் மொத்தத்தில் அமைதியாக நடந்து முடிந்தது என்றார்.மறுவாக்குப் பதிவு நடத்துவதற்கான நிலைமை எதுவும் இதுவரை இல்லை என்று அவர் தெரிவித்தார்.

வாக்காளர் பட்டியலில் பலரது பெயர்கள் விடப்பட்டிருப்பது பற்றிக் கேட்டதற்கு இது பற்றி விசாரித்துக் சரி செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென்று தெரிவித்துள்ளார்.

சிவகாசிச் சம்பவம் பற்றிச் செய்தியாளர்கள் கேட்டதற்கு, இந்தச் சம்பவம் பற்றி தேர்தல் பார்வையாளர்,மாவட்ட ஆட்சித் தலைவர், மாவட்டக் காவல்துறைக கண்காணிப்பாளர் ஆகியவர்களிடம் தேர்தல் ஆணையம் அறிக்கை கேட்டிருப்பதாகச் சாரங்கி கூறினார்.

தமிழகத்திலுள்ள 39 தொகுதிகளின் முடிவுகள் நாளை பிற்பகல் 1மணிக்கு முன் வெளியாகிவிடும் என்றும் சாரங்கி தெரிவித்தார்.

தேர்தலின் போது வாக்காளர்களை ஏற்றிவரப் பயன்படுத்தப்பட்ட சில வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டன. (து)



சென்னையில் பல்வேறு வாக்குச் சாவடிகளில் துப்பாக்கி ஏந்திய காவலர்கள் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப் பட்டிருந்தனர்.

**இந்தியச் செய்திகள்**

# சோனியாவே பிரதமராவார் கம்யூனிஸ்ட் கட்சி நம்பிக்கை

(புதுடில்லி)
மக்களவைத் தேர்தலுக்குப் பின் காங்கிரஸ் தலைமையில் மதச் சார்பற்ற அரசு அமையுமென்று கம்யூனிஸ்ட் கட்சி தெரிவித்துள்ளது.

தேர்தலில் காங்கிரஸ் கட்சிக்கு அறுதிப் பெரும்பான்மை கிடைத்தால் கட்சியின் தலைவர் சோனியா காந்திதான் பிரமராக இருப்பார் என்றும் அந்தக் கட்சி அறிவித்துள்ளது.

நேற்றுமுன்தினம் புதுடில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய கட்சியின் செய்தித் தொடர்பாளர் அபிஷேக்சிங் இதைத தெரிவித்தார்.

காங்கிரஸ் கட்சிக்குத் தனிப் பெருமபான்மை கிடைக்காத பட்சத்தில் ,கூட்டணிக் கட்சிகளுடன் கலந்தாலோசித்து மதச்சார்பற்ற முன்னணித் தலைமை பற்றி முடிவு செய்யப்படுமென்றார்.

தொங்கு நாடாளுமன்றம் ஏற்பட்டால் மத்தியில் மதச் சார்பற்ற அரசை அமைக்கும் பிற கட்சிகளுக்கும் காங்கிரஸ் ஆதரவளிக்க வாய்ப்புள்ளதா என்று கேட்டதற்கு இது யூகத்தின் அடிப்படையிலான கேள்வி என்று பதிலளித்தார்.

மத்தியில் அமையும் புதிய அரசு வேலை வாய்ப்புக்களை உருவாக்குவது மற்றும் வேளாண் துறை ஆகியவற்றில் முக்கிய கவனம் செலுத்துமென்றும் அவர் கூறினார். (து)

# தேர்தல் முடிவை அடுத்து அரசியல் கட்சிகளின் மந்திராலோசனை

(புதுடில்லி)
14 ஆவது மக்களவைக்கான தேர்தல் நேற்று முன்தினம் முடிவடைந்ததை அடுத்து, புதுடில்லியில் பா.ஜ.க.தலைவர்கள் கூடி ஆலோசனை நடத்தினார்கள்.

பிரதமரின் இல்லத்தில் நடைபெற்ற இக்கூட்டத்தில் பிரதமர் வாஜ்பாய்,துணைப் பிரதமர் அத்வானி,நிதியமைச்சர் ஜஸ்வந்த் சின்ஹா ஆகியோர் கலந்து கொண்டனர்.

தேர்தலுக்குப் பின் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து இக்கூட்டத்தில் ஆலோசிக் கப்பட்டதாகக் கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய குழுக்கூட்டம் வரும் 16 ஆம் திகதி புதுடில்லியில் நடைபெறுமென அக்கட்சியின் பொதுச் செயல்ாளர் ஹர்சிசன்சிங் சுர்ஜித் தெரிவித்துள்ளார்.

16 ,17ஆம் திகதிகளில் நடைபெறும் இக்கூட்டத்தில் தேர்தலுக்குப் பிந்திய நிலவரம் குறித்து விவாதிக்கப்படுமென அவர் கூறினார்.

சோனியா காந்தியின் தலைமை பற்றிக் கட்சிக்குள் பிளவு ஏற்பட்டுள்ளதா எனச் செய்தியாளர்கள் கேட்டதற்கு, எந்த ஒரு விடயத்தின் மீதும் இடதுசாரிக் கட்சிகள் பிளவுபட்டதில்லை என்று கூறிய அவர் அனைத்து விடயங்கள் குறித்தும் நாங்கள் விவாதித்து வருகிறோம் என்றும் தெரிவித்தார். (து)

# பீஹார் சதரா தொகுதியில் மறுவாக்குப் பதிவுக்கு உத்தரவு

பீஹார் மாநிலத்தில் மத்திய துணை அமைச்சர் ரஜீவ் பிரகாஷ் ரூடியும் ராஷ்ட்டிரிய ஜனதா தள் தலைவர் லாலு பிரசாத் யாதவும் போட்டியிட்ட சதரா மக்களவைத் தொகுதியில் இம்மாதம் 31ஆம் திகதி மறுவாக்குப் பதிவு நடைபெறுமென தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

கடந்த 26ஆம் திகதி நடைபெற்ற வாக்குப்பதிவின் போது, வன் முறைகளும் தேர்தல் முறைகேடுகளும் நடைபெற்றதாகத் தெரிவிக்கப்பட்ட குறறச்சாட்டை விசாரித்த தேர்தல் ஆணையத்தின் இரண்டு உறுப்பினர் குழுவின் அறிக்கையை அடுத்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (து)

# காங்கிரஸ் கூட்டணியில் தி.மு.க.நீடிக்கும்

(சென்னை)
மக்களவைத் தேர்தலுக்குப் பிறகு மூன்றாவது அணி அமைவதற்கான வாய்ப்பு ஏதும் இல்லையென தி.மு.க.தலைவர் கருணாநிதி கூறியிருக்கிறார்.

மத்திய சென்னைத் தொகுதிக்கு உட்பட்ட வாக்குச் சாவடியில் தமது வாக்கை அளித்த பின் செய்தியாளர்களுக்குப் பேட்டியளித்த அவர்,காங்கிரஸ் தலைமையிலான கூட்டணியில் தி.மு.க. நீடிக்கும்,இதில் எந்த மாற்றமும் இல்லை. எங்கள் முடிவு உறுதியானது என்றார்.

தொங்கு பாராளுமன்றம் ஏற்பட்டால் வேறு கட்சிக்குத் தி.மு.க. ஆதரவு தருமா என்று கேட்டதற்கு,இது பற்றி தற்போது ஏதும் சொல்லமுடியாது; மே 13 ஆம் திகதி முடிவுகள் எல்லாம் வெளியான பிறகுதான் ஏதுவும் கூறமுடியும் என்றும் கருணாநிதி தெரிவித்தார். (து)

# 15 மூத்த கிரிக்கெற் வீரர்கள்


# சிம்பாப்வே அணியில் இருந்து நீக்கம்

சிம்பாப்வே கிரிக்கெற் ஒன்றியத்திற்கெதிராக கிளர்ச்சியில் ஈடுபட்டுவந்த சிம்பாப்வே கிரிக்கெற் அணியின் 15வெள்ளையின வீரர்களினதும் ஒப்பந்தங்கள் முடிவிற்கு கொண்டுவரப்பட்டுள்ளதாக சிம்பாப்வே கிரிக்கெற் ஒன்றியம் அறிவித்துள்ளது. சிம்பாப்வே கிரிக்கெற் தேர்வுக்குழுவின் கட்டமைப்பு மற்றும் தகமை என்பன தொடர்பாக எழுப்பப்பட்ட சர்ச்சையைத் தொடர்ந்து கீற்ஸ்ரிக் அணியின் தலைமைப் பதவியில் இருந்து நீக்கப்பட்டதனால் இவ்விவகாரம் விஸ்வரூப மடைந்தது.

இது தொடர்பாக பக்கச் சார்பற்ற விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் எனத் தெரிவித்து சிம்பாப்வே கிரிக்கெற் அணியின் வெள்ளையின வீரர்கள் கிளர்ச்சியில் ஈடுபட்டதுடன், கீற்ஸ்ரிக் மீண்டும் சிம்பாப்வே கிாக்கெற் அணியின் தலைமைப் பதவியை வகிக்க வேண்டுமெனவும் தெரிவித்திருந்தனர்.

எனினும், இந்தக் கோரிக்கைகள் எதற்கும் சிம்பாப்வே கிரிக்கெற் ஒன்றியம் செவிசாய்க்கவில்லை. இதன் காரணமாக இலங்கை அணிக்கெதிரான ஒருநாள் சர்வதேச போட்டித்தொடர் மற்றும் நடைபெற்று முடிவடைந்த முதலாவது டெஸ்ட் கிரிக்கெற் போட்டியிலும் இந்தப் 15வீரர்களும் விளையாடவில்லைஎன்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

தற்போது இதுவிடயத்தில் சிம்பாப்வே கிரிக்கெற் ஒன்றியம் தெரிவித்துள்ள கருத்துப்படி இந்த 15 வீரர்களும் கிரிக்கெற் ஒன்றியத்தின் ஒழுக்கக் கோவைகளை மீறியுள்ளதனாலும், இக்கிளர்ச்சியை கைவிட்டு மீண்டும் அணியில் இணைந்து கொள்வதற்கான சந்தப்பத்தையும் இவர்கள் தவறவிட்டதனாலும் இவ்வீரர்கள் அனைவரினதும் ஒப்பந்தங்களை தாம் முடிவிற்கு கொண்டுவந்துள்ளதாக அறிவித்துள்ளனர். (68)




ஈஸ்வரன் கொன்பரன்ஸ அரைஇறுதிக் கைப்பந்தாட்டத்தின் போது ஹெரி கிற்லிஸ் வெற்றிப் பெருமிதத்துடன் காணப் படுவதைப் படத்தில் காணலாம்.

# மாகாண மட்டத்தில்

# மரதன் ஓட்டப்போட்டி

வடக்கு-கிழக்கு மாகாண மட்ட மரதன் ஓட்டப்போட்டி, சைக்கிள் ஓட்டப்போட்டி மற்றும் வேகநடைப் போட்டி என்பன எதிர்வரும் சனி, ஞாயிறு தினங்களில் திருகோணமலையில் நடைபெறவுள்ளன.

வடக்கு-கிழக்கு விளையாட்டுத் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற இவ் விள்ளயாட்டுப் போட்டிகளில் வடக்கு-கிழக்கின் 8 மாவட்ட அணிகளும் கலந்து கொள்ளவுள்ளன.

இப் போட்டிகளில் கலந்து கொள்ளவுள்ள யாழ்.மாவட்ட வீர, வீராங்கனைகள் நாளை மறுதினம் திருகோணமலை பயணமாகவுள்ளனர்.

இப் போட்டி நிகழ்வுகளில் சயிக்கிள் ஓட்டப்போட்டி மற்றும் வேக நடைப்போட்டி என்பன எதிர்வரும் 15ஆம் திகதி சனிக்கிழமையும் மரதன் ஓட்டப்போட்டிகள் மறுநாள் ஞாயிற்றுக்கிழமையும் திருகோண மலையில் நடைபெற ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மேலும் மரதன் ஓட்டப்போட்டி ஆண்கள் மற்றும் பெண்கள் இருபாலாருக்கும் 42.195கிலோ மீற்றர் தூரம் கொண்டதாகவே நடாத்தப்படவிருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

குறிப்பாக மாகாண மட்டப்போட்டி நிகழ்வுகளில் முதல் 10இடங்களைப்பெறும் வீர, வீராங்கனைகள் தேசிய மட்டப்போட்டி நிகழ்வுகளில் கலந்துகொள்ளும் தகுதியைப் பெறுவார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-68)

## அலுவலர் நியமனம்

(யாழ்ப்பாணம்)

மெய்வல்லுநர் தொழிழ்நுட்ப அமைப்பு, இனி வரும் காலங்களில் நடைபெறவுள்ள மெய்வல்லுநர் போட்டிகளுக்கான அலுவலர்களை நியமிப்பதற்கு திட்டமிட்டுள்ளது.

எனவே மெய்வல்லுநர் தொழில் நுட்ப அலுவலர் பரீட்சையில் சித்தியடைந்த ஆர்வலர்கள், இவ் அமைப்பின் நிர்வாக உறுப்பினர்கள் அனைவரையும் இன்று புதன் கிழமை மாலை 5.00மணிக்கு யாழ். துரையப்பா விளையாட்டரங்கிற்கு சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

அத்துடன் தொழில் நுட்ப அலுவலர் பரீட்சையில் சித்தியடைந்து சான்றிதழ் பெற்றுக்கொள்ளாதோருக்கும் இன்றைய தினம் சான்றிதழ் வழங்கப்படவுள்ளது. (உ-110)

## ஹம்பெக்ற் விற்பன்னர்கள்

# டெனிஸ் சுற்றுப்போட்டி நடப்புச் சம்பியன் விலகினார்

ஜேர்மனியில் நடைபெற்று வரும் ஹம்பெக்ற் விற்பன்னர்கள் டெனிஸ் சுற்றுப்போட்டிகளில் இருந்து பிரெஞ் பகிரங்க டெனிஸ் போட்டியின் நடப்புச்சம்பியனான யுவான் ஹார்லஸ் பெரோரா விலகிக்கொண்டுள்ளனர்.

இவரது மணிக்கட்டுப் பகுதியில் ஏற்பட்டுள்ள உபாதையினை அடுத்தே இவர் இச்சுற்றுப்போட்டியில் இருந்து விலகிக்கொண்டுள்ளதாக போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.


நேற்று நடைபெறவிருந்த டெனிஸ் போட்டியில் யுவான் ஹார்லஸ் கலந்து கொண்டிருப்பாரெனில் உலக டெனிஸ் வீரர்களுக்கான தரப்படுத்தலில் மூன்றாவது இடத்திற்கு முன்னேறியிருப்பார் என்று எதிர்பார்க்கப்பட்டது.

எனினும் இவர் உபாதைக்கு உள்ளானதை அடுத்து யுவான் ஹார்லஸின் ரசிகர்கள் பெரும் ஏமாற்றமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, பரிஸ் மாபெரும் பகிரங்க டெனிஸ் சுற்றுப்போட்டிகள் இம்மாதம் 24ஆம் திகதி ஆரம்பமாகவிருக்கின்றன.

இப் போட்டிகளில் யுவான் ஹார்லஸ் பேரேரா விளையாடுவார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இப் போட்டித் தொடரில் மீண்டும் தனது திறமைகளை இவர் வெளிப்படுத்துவாரா என்பதை பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும். (உ-68)



மோட்டார் காரோட்டப் போட்டிக்குத் தயாரான நிலையில் ஹெலியோ காஸ்ரோணிவஸ் தனது மார்பொறோ டொயாட்டா டலரா காருடன் நிற்பதைக் காணலாம்.

# இலங்கை-பாக். இடையில் ஒருநாள் கிரிக்கெற் போட்டி

## திட்டமிட்டபடி மலேசியாவில் நடக்கும்

இலங்கை-பாகிஸ்தான் அணிகளுக்கு இடையேயான ஒருநாள் கிரிக்கெற் போட்டித் தொடர் மலேஷியாவில் எதிர்வரும் 27,28,29 ஆம் திகதிகளில் திட்டமிட்டபடி நடைபெறும் என மலேஷிய கிரிக்கெற் சங்கத் தலைவர் துக்னு இம்ரான் தெரிவித்துள்ளார்.

இலங்கை-பாகிஸ்தான் அணிகளுக்கு இடையேயான ஒருநாள் கிரிக்கெற் போட்டித் தொடர் சில வேளைகளில் பிற்போடப்படலாம் என சில ஊடகங்கள் செய்தி வெளியிட்டமை குறித்து கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனைக் கூறியுள்ளார்.

மேற்படி போட்டியை நடாத்துவதற்கான சகல ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் இந்தப் போட்டியை தமது மைதானத்தில் நடத்துவதில் தாம் மிகுந்த அக்கறையும் ஆர்வமும் கொண்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.


மலேஷிய கரிக்கெற் சங்கத் தலைவர் துக்னு இம்ரான் தற்போது பாகிஸ்தானில் நடைபெறும் ஆசிய கிரிக்கெற் சபைக் கருத்தரங்கில் கலந்துகொண்டுள்ளார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.(உ-10)

# ஒலிம்பிக் வாய்ப்பை கோட்டை விட்டது ஆப்.

ஒலிம்பிக் குத்துச்சண்டைப் போட்டியில் பங்கேற்கும் வாய்ப்பை ஆப்கானிஸ்தான் வீரர் இழந்து விட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த சனியன்று நடந்த முன்னோடிப் போட்டியில் ஆப்கான் வீரர் அப்துல் ஹமீத் ரஹிமிமும் சீரியா வீரர் யாசர் ஷிகானும் மோதிய போது ஷகான் 26-6என்ற புள்ளி கணக்கில் ரஹீமியை வென்றார்.

இதன் மூலமே ஒலிம்பிக் வாய்ப்பை ஆப்கானிய வீரர்கள் இழந்தார்கள். இதேவேளை கிரீஸ் தலைநகர் எதென்ஸ் நகரில் எதிர்வரும் ஆகஷ்ட் மாதம் 13ஆம் திகதி ஒலிம்பிக் போட்டிகள் நடைபெறவுள்ளமை. இங்கு குறிப்பிட்த்தக்கது. (உ-10)



என்.எச்.எல்.ஈஸ்ரன் கொள்வோன்ஸ் கடைசி விளையாட்டில், பறப்பதற்கு ஆயத்தமாகும் பிலடெல்பியா பறக்கும் வீரர்கள்.

## விளையாட்டுச் செய்திகள்

# அவுஸ்திரேலிய வீரர் ஷேன் வோன் முரளிக்கு சவலாக விளங்குவார்

## ஆஸி.அணி முன்னாள் உப தலைவர் கருத்து

இலங்கை கிரிக்கெற் அணியின் நட்சத்திர சூழல்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் டெஸ்ட் கிரிக்கெற்றில் 521விக்கெற்றுகளைக் கைப்பற்றி உலக சாதனை நிலைநாட்டியுள்ளதை அடுத்து அவருக்கும் அவுஸ்திரேலிய வீரர் ஷேன்வோனுக்கும் இடையில் கடும் போட்டி எற்படப் போவதாக அவஸ்திரேலிய அணியின் முன்னாள் உப தலைவரும் சிம்பாப்வே அணியின் பயிற்றுவிப்பாளருமான ஜொ.்.ப் மாஸ் தெரிவித்துள்ளார்

சூழல்பந்து வீச்சாள் முத்தையா முரளி தரனுக்கு அடுத்தஇடத்தில் அவுஸ் திரேலிய வீரர் ஷேன்வோன் இருப் பதால், இருவருக்கும் இடையில் நல்லதொரு சவால் ஏற்பட்டுள்ளது.

ஷேனையும்முரளியையும் போன்ற இருசிறந்த சுழற்பந்து வீச்சாளர் கலிருப்பது சர்வதேச கிரிக்கெட்டிற்கு மிகவும் சிறந்தது.

முரளிதரன் கிரிக்கெற்றை மிகவும் நேசிப்பவர், அதனாலேயே அவரால் இத்தகைய உலக சாதனையை நிலை நாட்ட முடிந்தது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (உ-60,10)

# ஸ்பெயின் ரயில் குண்டு வெடிப்பின் சூத்திரதாரி ஒஸாமா பின்லேடன்

## மெட்ரிட் பொலிஸார் ஆதாரத்துடன் நிரூபித்தனர்

(மெட்ரிட்)

ஸ்பெயினின் தலைநகரான மெட்ரிட் நகரில் கடந்த மாதம் இடம் பெற்ற ரயில்கள் மீதான குண்டுத் தாக்குதல் சம்பவத்துடன் ஒஸாமா பின்லேடன் தொடர்பு பட்டிருப்பதாக தெரிவிக்கப்படு கின்றது.

941பேர் பலியான இந்தக் குண்டு வெடிப்புச் சம்பவத்திற்கு அல்கெய்டா தீவிரவாதிகளே காரணம் என்பதை மெட்ரிட் நகர் பொலிஸார் உறுதிப்படுத்தியுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

அமெரிக்காவில் உள்ள வர்த்தகமையக் கட்டடத்தில் குண்டு வைத்து தகர்த்த அல்கெய்டா தீவிரவாத அமைப்பின் தலைவர் ஒஸாமா பின்லேடனுக்கு உதவியதாகக் கூறப்படும் அமீர் அஜீஸின் கைரேகை மெட்ரிட் நகருக்கு அருகில் உள்ள வீடு ஒன்றின் சுவரில் பதிந்திருப் பதை மெட்ரிட் நக ரப் பொலிஸார் கண்டு பிடித் துள்ளதையடுத்தே ஒஸாமா பின்லேடன் தான் இந்தக் குண்டு வெடிப்புச் சம்பவத்துக்கு காரணம் என்பது தெரிய வந்துள்ளது.

இதேவேளை, பின்லேடனுக்கு உதவிய அமீர் அஜீஸ் தற் போது இறந்து விட்டதாகவும் கூறப்படுகின்றது.

கடந்த ஏப்ரல் மாதம் 3ஆம் திகதி மெட்ரிட் நகர் அருகே உள்ள வீடொன்றை பொலிஸார் சுற்றி வளைத்த போது, அந்த வீட்டில இருந்த 7 தீவிர வாதிகள் குண்டை வெடிக்கவைத்து தற்கொலை செய்திருந்தார்கள்.

இந்த 7 தீவிரவாதிகளில் அமீர அஜீசும் ஒருவர் எனக் கூறப்படுகிறது. (உ-10)



இறந்து கிடக்கும் இரண்டு மனித உடல்களை ஆப்கானிஸ்தான் பொலி ஸார் பார்வையிடுவதைப் படத்தில்காணலாம்.

# ஷரோனின் அமெ.பயணம் இறுதி நேரத்தில் ரத்து

இஸரேலிய பிரதமர் எரியல் ஷரோன் அமெரிக்காவிற்கு மேற்கொள்ளவிருந்த தனது பயணத்தை ரத்துச் செய்துள்ளார்.

இம மாதம் 16,18ஆம் திகதிகளிலேயே ஷரோன் அமெரிக்கா செல்வதாக திட்டமிடப்பட்டிருந்தது.

அத்துடன், வாஷிங்டனில் நடைபெறவுள்ள மாநாடு ஒன்றில் உரையாற்றுவதாகவும் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

மேலும் இஸ்ரேலியப் பிரதமர் லிக்குயிட் கட்சியில் நடைபெற்ற கருத்தறியும் வாக்களிப்பின் முடிவுகள் குறித்தும் புஷ்ஷுடன் ஆராய்வதாக இருந்ததாக இஸ்ரேலியப பிரதமர் அலுவலகம் தெரிவித்திருந்தது.

பலஸ்தீன காஸா பகுதியில் இருந்து இஸ்ரேலியப் படையினரை வாபஸ் பெறுவதற்காகவே லிக்குயிட் கட்சியின் ஆதரவாளர்கள் மத்தியில் கருத்தறியும் வாக்கு இடம்பெற்றது.

ஆனால், வாக்களிப்பில் ஷரோனின் கருத்தை அவரது ஆதரவாளர்கள் எதிர்த்தனர். அவர்கள் ஆதரவு தெரிவித்திருந்தால் அது தொடர்பாக அமெரிக்க ஜனாதிபதியுடன் கலந்தராயும் பொருட்டு வாஷிங்டன் செல்வதாக திட்டமிடப்பட்டிருந்தது.

ஆனால் வாக்களிப்பு ஷரோனின் கருததுக்கு மதிப்பு அளிக்காமையாலேயே அவரது பயணம் ரத்துச்செய்யப்பட்டிருப்பதாக கூறப்படுகிறது.

# பயங்கரவாதத்தை பூண்டோடு ஒழிக்க சவூதி முடிக்குரிய மன்னர் கங்கணம்

(ரியாத்)

சர்வதேசரீதியில் தலைதூக்கியுள்ள பயங்கரவாதத்தை புண்டோடு ஒழித்துக்கட்டப்போவதாக சவூதி முடிக்குரிய இளவரசர் அப்துல்லாஹ் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் சவூதி தொலைக் காட்சி நிறுவனம் ஒன்றிற்கு அளித்த விசேட செவ்வியிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் வழங்கிய செவ்வியில் இதுகுறித்து மேலும் தெரிவிக்கையில்,

சவூதி மன்னராடசியை முழுமையாக ஒழித்துக்கட்டும் நோக்கிலேயே பயங்கர வாதிகள் செயற்பட்டு வருகின்றார்கள்.

சவூதியில் கடந்த ஆண்டு முதல் பயங்கரவாதிகள் அடிக்கடி தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றார்கள். இத்தாக்குதலில் வெளிநாட்டவர்களே அதிகம் பாதிக்கப்படுகின்றார்கள்.

ஆனாலும், சவூதியில் பாதுகாப்பற்ற சூழ்நிலையொன்று தற்போது உருவாகிவருகின்றது.

இதனைத் தொடர்ந்து, அமெரிக்காவும், பிரிட்டனும் சவூதியில் வாழும் தமது நாட்டு மக்களை உடனடியாக அங்கிருந்து வெளியேற்ற வேண்டும் எனக் கேட்டுள்ளது.

எனவே பயங்கரவாதிகளை முற்றாக ஒழித்துக்கட்ட மக்கள் ஒத்துழைக்க வேண்டும் என்றார். (உ)

## WORLD NEWS
## உலக தரிசனம்

# சிறப்பாகப் பணிபுரிகின்றனராம் ஈராக்கில் நிலைகொண்டுள்ள அமெ. படைகளுக்குப் புஷ் பாராட்டு

(வாஷிங்டன்)

ஈராக்கில் நிலைகொண்டுள்ள அமெரிக்கப் படையினர் அங்கு சிறப்பாகப் பணியாற்றிவுருவதாக அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ.புஷ் பாராட்டுத் தெரிவித்துள்ளார்.

ஈராக்கிலுள்ள சிறைக் கைதிகளை அமெரிக்கப் படையினர் சித்திரவதை செய்வதாக வெளிவரும்செய்தி குறித்து ஊடகம் ஒன்றிற்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்தும் கருத்து தெரிவிக்கையில்.

ஈராக்கில் உள்ள கைதிகளை அமெரிக்கப் படையினர் நல்லமுறையிலேயே பாதுகாத்து வருகின்றனர். இவர்களின் இந்தச் சேவை பாராட்டத்தக்கது.

அமெரிக்கப் படையினரை வழிநடத்திச் செல்லும் அமெரிக்கப் பாதுகாப்புத் துறை அமைச்சர் ரம்ஸ் வெல்டையும் பாராட்ட வேண்டும் என் றார். (உ-61,10)



ஜாலுஜில் கடந்த திங்கட்கிழமை அமெரிக்க ஈராக் படையினர் பாது காப்புப் பணியில் ஈடுபட்டிருந்த போது.

# 32 கோடி டொலருக்கு எரிகல் விற்பனை

அவுஸ்திரேலிய விவசாயி ஒரு வர் நிலைத்தைத் தோண்டிய போது கிடைத்த எரி நட்சத்திரக்கல் 32லட்சம் டொலருக்கு விற்கப்படவுள்ளது.

11கிலோ எடையுள்ள இந்தக் கல் கோடிக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பு செவ்வாய்க்கிரகத்திற்கும் வியாழனுக்கும் இடையே சிறு கிரகம் உருவான போது உடைந்து சிதறி பூமியின் மீது விழுந்திருப்பதாக நம்பப்படுகிறது.

இது இரும்பாலும் நிக்காலாலும் ஆனது. பூமியில் உள்ள 8 எரி நட்சத்திரக் கற்கலில் இதுவும ஒன்று இது 25ஆண்டுகளுக்கு முன் விவசாயியால் கண்டுபிடிக்கப்படடது. மியூசியாங்கள் பெரிய தொழில் நிறுவனங்கள் ஆகியவை இநதக் கல்லை வாங்கக் கூடும் என்று எதிர்பாக்கப்படுகிறது. (உ)

# அல்கெய்டா தாக்கியழித்த அமெரிக்க வர்த்தக நிலையக் கட்டடம் 1,776 அடி உயரத்தில் மீள் நிர்மாணம்

(வாஷிங்டன்)

அல்கெய்டா தீவிர வாத அமைப்பினால் நியூயோர்க் நகரில் உள்ள 111மாடிக் கட் டடம் தகர்க்கபப்பட்ட அதே இடத்தில் ஆயிரத்து 776 அடி உயரமுடைய கட்டடம் ஒன்றை புதிதாக அமைப்பதற்கு மேறபடி கட்டட உரிமையாளர் லாரி சில்வாஸ் டீன் நடவடிக்கை எடுத்துள்ளார்.

அதற்கமைய இப்புதிய கட்டடத்தை நிர்மாணிப்பதற்கான அடிக்கல் நாட்டும் விழா எதிர் வரும் ஜூலை மாதம் 4ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இக்கட்டடத்தை நிர்மாணிப்பதற்கு 37 ஆயிரத்து 500 கோடி டொலர் தேவைப்படுகின்ற நிலையில் 23 ஆயிரத்து 500 கோடி டொலரை நியூஜோர்க்கில் உள்ள இன் சூரன்ஸ் கம்பனியொன்று வழங்க முன்வந்துள்ளது.

1776 ஆம் ஆண்டு அமெரிக்கா சுதந்திரம் அடைந்ததைக் குறிக்கும் வகையிலேயே ஆயிரத்து 776 உயரமுள்ள கட்டடம் நிர்மாணிக்கபடவுள்ளதாகவும், இதற்கு "சுதந்திரக் கோபுரம்" என்று பெயரிடப் போவதாகவும் கட்டட உரிமையாளர் கூறியுள்ளார்.

இதேவேளை,சர்வதேச பயங்கர வாதியாக இனம் காணப்பட்டுள்ள ஒஸாமா பின்லேடனின் அல்கெய்டா அமைப்பினர் கடந்த 2001ஆம் ஆண்டு செப் ரெம்பர் மாதம் 11ஆம் திகதி நியூஜோர்க்கில் உள்ள 111 மாடி வர்த்தக் கட்டடத்தை விமானமூலம் தகர்த்தமையும் இதில் 3ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தமையும் தெரிந்ததே. (உ-10)

# அரசு சுவீகரிக்கும் காணிகளுக்கு நட்ட ஈடுவழங்க பிரதமர் பணிப்பு

(கொழும்பு)

புதிதாக நெடுஞ்சாலைகளை அமைக்கும் பொருட்டு அரசினால் சுவீகரிக்கப்படும் காணிகளுக்கு தற்போதைய பெறுமதிக்கு ஏற்ப நட்ட ஈடுவழங்குமாறு பிரதமரும் நெடுஞ்சாலை அமைச்சருமான மகிந்த ராஜபக்ஷ ஆலோசனை வழங்கியுள்ளார்.

அவ்வாறு சுவீகரிக்கப்படும் காணிகளை அள்வீடு செய்யும் போது காணி உரிமையாளர்களுக்கு வழங்கப்படவுள்ள கொடுப்பனவு எவ்வளவு என்பதை தனக்கு தெரிவிக்குமாறும் பிரதமர் கேட்டுள்ளார்.

வீதி அபிவிருத்தி அதிகார சபைத் தலைவருடன் நேற்று முன்தினம் நடத்திய பேச்சு வார்த்தையின் போதே பிரதமர் இந்த ஆலேசனையை வழங்கியுள்ளார்.

அலரிமாளிகையில் நடைபெற்ற இந்த சந்திப்பில் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் உயர் அதிகாரிகளும் கலந்து கொண்டனர். (உ-61,10)

# தொண்டர் ஆசிரியர்கள் உரிமை மீறல் மனுத் தாக்கல்

(அம்பாறை)

தொண்டர் ஆசிரியர் நியமனத்தின் போது புறக்கணிக்கப்பட்டதாக கூறப்படும் அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த 12தொண்டர் ஆசிரியர்கள் உயர் நீதிமன்றில் அடிப்படை உரிமை மீறல் வழக்குத் தொடுத்துள்ளனர்.

பாதிக்கப்பட்ட தமக்கு தலா 20இலட்சம் ரூபா நட்ட ஈடு வழங்க வேண்டும் என இந்த மனுவில் இவர்கள் கோரியுள்ளனர்.

வடக்கு-கிழக்கு மாகாண சபையின் செயலாளர் மாகாணக் கல்விப் பணிப்பாளர், அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளர்,மேலதிக மாகாணக்கல்விப் பணிப்பாளர், சம்மாந்துறை கல்விப் பணிப்பாளர், பாட சாலை அதிபர்கள், சட்ட அதிபர் ஆகியோர் வழக்கில் பிரதி வாதிகளாக குறிப்பிடப் பட்டுள்ளனர்.

வழக்கு எதிர்வரும் 24ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. (உ-60,10)

## இன்று தேர்

(யாழ்ப்பாணம்)

ஈழத்து இராமேஸ்வரம் என அழைக்கப்படும் புங்குடுதீவு பாணாவிடை சிவன் தேவஸ்தான தேர்த் திருவிழா இன்று புதன்கிழமையும் நாளைய தின்ம் தீர்த்த உற்சவமும் இடம் பெறவுள்ளது. (உ-8)



திருமதி கோகிலா மகேந்திரனின் "முகங்களும் மூடிகளும்" சிறுகதைத் தொகுதி வெளியீட்டு விழாவில் சிறபபு விருந்தினராகக் கலந்து கொண்ட வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதன் மங்கள விளக்கேற்றுவதையும், அருகில் இராமநாதன் கல்லூரி அதிபர் திருமதி ஆ. சிவஞானசுந்தரம், நூலாசிரியர், சைவப்புலவர் சு.செல்லத்துரை ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம்.





அண்மையில் கொழும்பில் இடம்பெற்ற சைவ எழுச்சிப் பெரு விழாவில் தேவார இசைமணி கலாபூஷணம் தாவடியூர் கே.எஸ. ஆர். திருஞானசம்பந்தன் பண்ணிசைக் கச்சேரி நிகழ்த்துவதையும்,

காஞ்சிபுரம், தொண்டை மண்டல ஆதீனம் 232 ஆவது பட்டம் ஸ்ரீலஸ்ரீ திருவம்பலதேசிக ஞானப்பிரகாச பரமாசாரிய சுவாமிகள் கலாபூஷணம் திருஞானசம்பந்தனுக்குப் பொன்னாடை போர்த்திக் கௌரவிப்பதனையும் படங்களில் காணலாம்.

# மலையக மக்கள் முன்னணி ஐ.தே.க. சந்திப்பு விரைவில்

(மாத்தறை)

நடைபெறவுள்ள மாகாண சபைத் தேர்தல்கள் சம்பந்தமாக மலையக மக்கள் முன்னணி ஐக்கிய தேசியக் கட்சியும் பேச்சு வார்த்தைகளை நடத்தவுள்ளது.

விரைவில் இடம் பெறவுள்ள இப்பேச்சு வார்த்தைகளின் போது மலையக மக்கள் முன்னணியினரதும் இந்திய வம்சா வழித் தமிழ் மக்களினதும் தனித்துவம சம்பந்தமாகவே பேசப்படும என மலையக மக்கள் முன்னணி தெரிவித்துள்ளது.

இதேவேளை,மலையக மக்கள் முன்னணி மத்திய, ஊவா, மேல் மாகாண சபைகளில் போட்டியிடவுள்ள நிலையில் இதனை அடிப்படையக வைத்தே இப்பேச்சுக்கள் அமையும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன்,இது சம்பந்தமாக சில ஒப்பந்தங்களையும் ஐக்கிய தேசியக் கட்சியுடன் மலையக மக்கள் முன்னணி செய்து கொள்ளவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (உ-4,63)

# பாதாள உலக உறுப்பினர் கொழும்பில் சுட்டுக் கொலை

(கொழும்பு)

கொழும்பு புளுவன்ரல் பகுதியில் நேற்று முன்தினம் இடம் பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் ஒருவர் கொல்லப் பட்டுள்ளார்.

பிரபல பாதாள உலகக் கேஷ்டியைச் சேர்ந்த் ஒருவரே இவ் வாறு சுட்டுக் கொல்லப் பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பல்வேறு குற்றச் செயல்களுடனும் சம்பந்தப்பட்டவர் எனத் தெரிவிக்கப்படும் இவரை வான் ஒன்றில் வந்த குழுவினரே சுட்டுவிட்டு தலைமறைவாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (உ-4,63)

# பண்புள்ள சமுதாயத்தை உருவாக்க பாடசாலைகளே பாடுபடவேண்டும்

## வடக்கு- கிழக்கு மாகாண முன்னாள் கல்விப் பணிப்பாளர்

(பருத்தித்துறை)

"ஆலயங்களுக்குப் பெரும் தொகைப்பணத்தைச் செலவு செய்யும் எமது மக்கள் பாட சாலை களைக் கவனிக்காதது பெருங்குறைபாடாகும். பாடசாலைகளின் அபிவிருத்திகளுக்கும் பங்களிப்பது சமூகத்தின் பெரும் கடமையாகும்.

மேற்கண்டாவாறு கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலய வருடாந்த பரிசளிப்பு விழாவிலே பிரதமவிருந்தினராகக் கலந்து கொணடு உரையாற்றிய வடக்கு கிழக்கு மாகாண கல்வித் திணைக்கள இளைப்பாறிய மாகாணக் கல்விப்பணிப்பாளர் கே.கந்தசாமி குறிப்பிட்டார்.

அதிபர் ஆர். இராகவன் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் தொடர்ந்தும் உரையாற்றிய கந்தசாமி,

பணபு என்பது வாங்கக் கூடியதல்ல பாடசாலையின் பல்வேறு அனுபவங்களினூடாக ஒருவனுள செறிந்து அச்செறிவின ஊடாகவே பண்பு உருவாக்கப்படு கின்றது. பண்புமாற்மென்பது காலத்தோடு இணைந்து பாட சாலைச் செயற்பாடுகளினூ டாக மாற்றம் பெறவேண்டும். தோறறத்தில் மாறவேண்டும் நடத்தையில் மாறவேண்டும்.

முனனேற்றமென்பது அனைத்து மாணவரிலும் பிரதிபலிக்க வேணடும். அனைத்து மாணவர்களுக்கும் எழுத வாசிகக்த் தெரிய வேண்டும் நான் இங்கு படித்த காலத்தில் இது ஒரு ஆண் பாட சாலை. இன்று இது கலவன் பாடசாலையாக இருக்கின்றது. பால் ரீதியாக பிரித்து மாண வர்களிடையே வித்தியாசத்தை உண்டு பண்ணாது கலவன் பாட சாலையாக இருப்பதால் மிகச் சிறந்த விழுமியத்தைக் கொண்டா மாணவர்களை உருவாக்க முடியும்

ஆரம்பப் பாடசாலை தான் மனிதனின் வளர்ச்சிக்கு அத்திபாரம் இடும் இடமாகும் நாங்கள் உயர்ந்தஸ்தானங்களில் இருககின்றோம். என்றால் இங்கு கற்பிதத ஆசிரியர்கள் அன்புடனும் கட்டுக்கோப்புடனும் எம்மை வளர்த்ததுதான் காரணம்.

முன்பு ஆசிரியா தெருவில் செல்லும்போது தெய்வத்தைக் காண்பது போல நல்லதொரு சீவனைக்காண்பது போல தலைசிறந்த ஆசிரியரைக் காண பது போல் நாம் மனதாரச் சந்தோஷமடைந்தோம்.

இன்று அவ் வாறான மனப்பாங்கு ஏற்படுகின்றதா? அவ்வாறு ஏற்படாவிடட்டால் அது பிள்ளையின் தவறா? அல்லது ஆசிரியரின் தவறா? அல்லது மதிக்கப் படாதவர்கள் பலா எம்மிடையே ஆசிரியர்களாக இருக்கின்றார்களா?

இன்றும் தெய்வீக அம்சம் பெருநதிய பல ஆசிரியர்களை நாம் சமுகத்தில் காண்கிறோம்.

எங்கள் பிள்ளைகள் போர் காரணமாக இழந்தவற்றில் மிக முக்கியமானது பண்பு, இது பிள்ளைகளிடையே வன்மைப் பண்பாக மாற்றம் அடைந்து செல்கின்றது. இதற்குக் காரணம் பாடசாலைகள் அல்ல. பாடசாலையில் நடைபெறும் புற நிகழ்ச்சிகளின் அம்சங்களைக கற்றுத் திறன்பெற பிள்ளைகளுக்கு நேரமினமையேயாகும். வெளியிடங்களில் புத்தககல்வியைப் பெற்றுக்கொள்வதற்கு மாணவர்கள் செல்வதே நேரமின்மைக்குக் காரணம் காரணமாகும். இந் நிலை மாறவேண்டும்.

திறமையான பிள்ளைகள் உருவாக வேண்டும். திறமையற்ற பிள்ளைகள் உருவாகக் கூடாது. ஒவ்வொரு பிள்ளையிடமும் ஏதோ ஒரு திறமை வளர்க்கப்படவேண்டும். அதற்கான சரியான களம் பாடசாலைகளே.

மககள் கோவில்களுக்கு பெருந் தொகைபணங்களை செலவு செய்வதை விடுத்து பாடசாலைகளின் அபிவிருத்தி மேம்பாட்டிற்கும் பங்களிக்க வேண்டும். அதுவே சமூகத்தின் பொக்கிசமாக இருக்கும் என்பதை மறந்து விடக்கூடாது என்றார். (உ-52)

## விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

தவக கல்வி வலயத்தின் ஊர்காவற்றுறை கோட்டக் கல்வி அதிகாரி பதவிக்கும், உதவிக் கல்விப் பணிப்பாளர் (முறை சாராக் கல்வி)பதவிக்கும் விண்ணப்பகள் கோரப்பட்டுள்ளன.

இப்பதவிக்கு தீகவ வலயத்திற்குள் கடமை புரியும் இ.க. நிர்வாக சேவையைச் சேர்ந்தவர்களும், இ.அதிபர் சேவை யைச சேர்ந்த தரம்1,தரம்2-1ஐச் சேர்ந்தவர்களும் விண்ணப்பிக்க முடியும்.

விண்ணப்பிப்பவர்கள் தமது சுயவபரங்கள் அடங்கிய விண்ணப்பத்தை இரு பிரதிகளில் தயாரித்து தீவக வலயக்கல்வி அலுவலகத்தில் 18ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்குமாறு மேலதிக மாகாணக் கல்விப் பணப்பாளர் திருமதி செ. மகாலிங்கம் அறிவித்துள்ளார். (உ)

# மாகாணசபை தேர்தல் கடமைகளில் அதிபர் ஆசிரியர்கள் ஈடுபடுவர்

(கொழும்பு)

எதிர்வரும் மாகாணசபைத் தேர்தல் கடைமைகளுக்கென அந்தந்த மாகாணங்களில் உளள பாடசாலை ஆசிரியர்கள மற்றும் அதிபர்களை ஈடுபடுத்துவது தொடர்பில் தேர்தல் செயலகம் ஆராய்ந்து வருகிறது.

இதன்படி குறிப்பிட்ட மாகாணத்தில் தேர்தல் கடைமைகளில் ஈடுபடும் அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு தபால் மூலம வாக்களிப்பதற்கான வசதிகளைச் செய்து கொடுக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

கலைக்கப்பட்ட மேல், தென், ஊவா, சாப்பிரகமுக, வடமத்திய, மத்திய ஆகிய மாகாணங்களிற்கான தேர்தல்கள் நடபெறவுள்ள நிலையில் இதற்கான வேட்பு மனுக்கள் விரைவில் கோரப்படும் என தேர்தல் ஆணையாளர் தயானந்ததிஸ்ஸ நாயக்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை, தற்பொழுது பெருமளவு பாடசாலைகளில் உயர்தரப் பரீட்சைகள் இடம் பெற்று வருவதனால் அப் பாடசாலைகளுக்கு விடுமுறை காலமாகக காணப்படுகிறது. இதனால் விடுமுறைக்கால சம்பளத்தைப் பெறுவதற்காக எதிர் வரும் 20 ஆம் திகதி ஆசிரியர்கள் பாடசாலைகளுக்குச் செல்லும் போது தபால் மூலம் வாக்களிப்பதற்கான விண்ணப்பங்களை பூர்த்தி செய்து அனுப்பி வைககுமாறு தேர்தல் ஆணையாளர் அதிபர்கள ஆசிரியர்களிடம் கேட்டுக்கொண்டுள்ளார்.

அத்துடன் தபால் மூலவாக்காளர்களுக்கான விண்ணப்ப முடிவுத் திகதி எதிர்வரும் 25 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதாகவும் அவா அறிவித்துள்ளார். (உ-4,63)

## இன்று ஒரு தகவல்

### கவலையில்லாத மனிதன்

ஒரு நாட்டின் மன்னன் அண்டைய நாடுகள் பலவற்றுடனும் போரிட்டு வெற்றி வாகை சூடி, அந்நாடுகள் யாவற்றையும் தன்னுடன் இணைத்துக் கொண்டான். பேரரசனாகிய அவனுக்குச் சகல செல்வங்களும் பெருகிக் குவிந்தன. மகாராசாவெனப் பெருமை கொண்டிருந்தும் அவனுக்கு மனதிலே நிம்மதி இல்லாத ஒருவித தவிப்பு அவனை ஆட்டி வருத்தியது.

தன்னைத்தேடி வந்த பெரியோர்கள் பலரையும் வரவேற்று அவர்களிடம் தன் மன நிம்மதிக்கு ஏதாவது வழி உண்டா என ஆராய்ந்தான். ஆனால் எவ்வித பலாபலனும் அவனுக்குக் கிடைக்கவில்லை. புலப்படாத மனச் சஞ்சலமும், நிம்மதிக் குறைவும் காரணமாக அமைதியில்லாதிருந்த அரசனிடம், அந்நாட்டிற்கு வந்திருந்த ஒரு யோகியார் வந்தார்.

அரசன் யோகியாரை வரவேற்று உபசரித்தான். யோகியாருடன் தனது மனச்சஞ்சலம் பற்றியும் காரணமில்லாத மனக்குழப்பமும் ,நின்மதிக் குறைவும் இருப்பது பற்றியும் எடுத்து விளக்கி, அதனைப போக்குவதற்கான வழிகள் ஏதும் செய்து தரும்படி வேண்டினான்.

அரசனது வேண்டுகோளைச் செவிமடுத்தயோகியார் சற்று நேரம் சிந்தனையில் இருந்தார். பின் அரசனிடம் உனது நாட்டில் யார் கவலை இல்லாது சந்தோஷமாக இருக்கிறானோ? அவனது சட்டையை வாங்கி நீ அணிந்து கொள் என்றார்.

அதுகேட்ட அரசன் தனது சேவகர்களை அழைத்து நாட்டின் நாலாபக்கமும் சென்று நாட்டின் கவலையற்ற மனிதனைத் தேடிக் கண்டுபிடித்து வரும் படி அனுபபினான்.சேவகர்களும் மிகவும் அக்கறையுடன் எல்லாப் பாகமும் தேடிஅலைந்தனர்.

பல நாட்கள் அலைந்த பின் அவர்களிடம் ஒருவன் அகப்பட்டான். அவனைக் கொண்டுவந்து அரசன் முன் விட்டார்கள். நீண்ட பல விசாரணைகளின் பின்னர் தான் ஒரு கவலையற்ற மனிதன், மிகவும் சந்தோஷமாக இருக்கிறேன். எனக்கு எதைப் பற்றிய கவலைகளும் கிடையாது என உறுதிபடக் கூறினான்.

உண்மையில் எந்தவித கவலையுமில்லாத மனிதன் தான் இவன் என்பதை நன்கு உணர்ந்து கொண்ட அரசன் யோகியார் சொன்னபடி அம்மனிதனிடம் அவன் அணியும் சட்டை ஒன்றைத் தரும் படி யாசித்தான்.ஆனால் அது கிடைக்க வில்லை.

காரணம் அவனுக்குச் சட்டையே கிடையாது. அரசன் அப்போது தான் உலகிற் கவலையற்ற மனிதன் எப்படி இருப்பான் என்பதைச் சிந்தித்து முடிவு காண முடிந்தது.

நீர்வை மணி

## எரிபொருள் விலையை உயர்த்த பெற்றோலிய கூட்டுத்தாபனம் சிபார்சு

(கொழும்பு)

எரிபொருளின் விலையை லீற்றர் ஒன்றுக்கு 2ரூபாவினால் அதிகரிக்குமாறு பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அரசாங்கத்திற்கு சிபார்சு செய்துள்ளது.

இதன்படி பெற்றோல் ,டீசல் என்பவற்றின் விலை மாத அடிப்படையில் அதிகரிக்கவேண்டும். இதன் மூலம் மானியத்தை உள்ளடக்கியதான பெருமளவு இழப்பை ஈடுசெய்ய முடியும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

கடந்த பெப்ரவரி மாதம் 15ற்கு பின் லீற்றருக்கு 2ரூபாவினால் எரிபொருள் விலை அதிகரிக்கப்படுமானால் அடுத்த சில மாதங்களில் வாழ்க்கைச் செலவு அதிகரிக்குமெனத் தெரிவிக்கப்படுகிறது. உலக் சந்தையின் நிலைவரப்படி எரிபொருள் விலை அதிகரிக்கப்படாவிடில் மானியங்களை திறைசேரி கட்டுப்படுத்த வேண்டி ஏற்படும்.

எரிபொருள் விலை அதிகரிப்பைச் செய்யுமாறு திறைசேரிக்கு கடிதம் அனுப்பியுள்ளதாகவு இதற்கான பதில் விரைவில் கிடைக்குமென எதிர்பார்ப்பதாகவும் திறைசேரியின் தலைவர் ஜாலிய மெதகம தெரிவித்துள்ளார்.

தற்போது எரிபொருள் விலை மலிவாக இருப்பதால் ஏற்படும் இழைப்பை திறைசேரியே ஏற்று வருகிறது.ஒருமாதத்திற்கு ஒரு தடவை இரண்டு ரூபாவினால் அதிகரிக்கப்படவேண்டும் என்று சிபார்சு செய்யப்பட்டுள்ளது. (உ-6)

## இடர்காப்பு முகாமைத்துவத் திட்டம்

(கொழும்பு)

வரலாற்றுச் சிறப்பு மிக்க சிகிரியாக் குன்றுக்கு விஜயம் செய்யும் உள்ளூர் வெளிநாட்டு உல்லாசப் பயணிகளின் பாதுகாப்புக் கருதி விசேட இடர்காப்பு முகாமைத்துவத் திட்டம் ஒன்றை அமுல் செய்யவுள்ளதாக கலாசார தேசிய பாரம்பரிய அமைச்சர் விஜித்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

அண்மையில் சிகிரியாவிற்கு சுற்றுலாப் பயணத்தை மேற்கொண்ட சுமார் 200 பேருக்கு விசக் குளவிகள் கொட்டியதையடுத்தே அமைச்சர் இந்தத் திட்டத்தை அமுல் செய்யத் தீர்மானித்துள்ளார்.

(உ-60,10)

## நோர்வேயின் அனுசரணை குறித்து ஜே.வி.பி. இப்போது மௌனம் காப்பது ஏன்?

### ராஜித சேனாரத்ன கேள்வி

(கொழும்பு)

இலங்கையின் இனப்பிரச்சினையைப் பயன்படுத்தி அதிகாரத்தை தக்க வைக்கும் முயற்சிகளில் ஜே.வி.பி. ஈடுபட்டுவருவதாக ஐக்கிய தேசியக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன குற்றம் சாட்டியுள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகளை தமிழர்களின் ஏகப் பிரதிநிதிகளாக ஏற்றுக்கொள்ள முடியாது எனக்கூறி, ஐக்கியதேசியக் கட்சியின் ஆட்சிக் காலத்தில் ,நோர்வேயின் சமாதான முயற்சிகளைக் கடுமையாக எதிர்த்து வந்த ஜே.வி.பி. இப்போது தமது கையில் ஆட்சி வந்ததும் அது தொடர்பாக மௌனம் சாதிப்பது எமக்குப் பெருமஆச்சரியத்தைத்தருகிறது.

ஐக்கியதேசியக் கட்சியின் ஆட்சிக் காலத்தில் தமிழீழ விடுதலைப்புலிகளின் உறுப்பினர்களுக்கு உலங்கு வானூர்தி சேவை வழங்கப்பட்டதைக் கடுமையாக விமர்ச்சித்த ஜே.வி.பியினர் தற்போது விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்திற்கு வானூர்தி சேவை வழங்கப்படுவது குறித்து மௌனம் சாதித்து வருகின்றனர்.

ஜே.வி.பியினரின் இந்த திடீர் மாற்றம் உண்மையாகவே அவர்கள் சமாதானத்தை விரும்புவதன் வெளிப்பாடாக இருந்தால், அதை நாம் வரவேற்கிறோம். இனப்பிரச்சினை முயற்சிகளை பயன்படுத்தி அதிகாரத்திற்கு வருவதற்கு ஜே.வி.பி முயலுமானால் அது கேள்விக்குரிய விடயமாகும்.

அத்துடன் தற்போதைய சமாதானச் செயற்பாடுகள் தொடர்பாக ஜே.வி.பி. தனது நிலைப்பாட்டினை நேரடியாகக் கூறாமல் நாட்டுப் பற்றுள்ள தேசிய இயக்கம் எனப்படும் அமைப்பின் பின்னணியில் மறைந்துகொண்டு சமாதானச் செயற்பாடுகள் தொடர்பாக விமர்சித்து வருகிறது என்றும் ராஜித சேனாரத்ன குற்றம் சாட்டியுள்ளார்.

(உ-121)

## கைதிகளுக்கு பொது மன்னிப்பு வழங்கியதில் பாரிய முறைகேடுகள்

### வெலிக்கடை கைதிகள் நீதி அமைச்சரிடம் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

விசாக் நோன்மதி தினத்தன்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவினால் வழங்கப்பட்ட பொது மன்னிப்புத் தொடர்பான அறிக்கையில் பல்வேறு முறைகேடுகள் இடம் பெற்றிருப்பதாகக் கைதிகள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

வெலிக்கடைச் சிறைச்சாலையில் உண்ணாவிரதம் இருந்த சிறைக் கைதிகள் சிலர்நேற்று முன்தினம நீதி அமைச்சர் டபிள்யூ.ஜி.ஜே செனிவிரத்தினவைச் சந்தித்துப் பேசியபோதே இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்தார்கள். கைதிகள் நீதி அமைச்சரிடம் இதுபற்றித் தெரிவிக்கையில்,

பொது மன்னிப்பு வழங்கும் விடயத்தில் அதிகாரிகள் சிலர் தவறான முறையில் வழிநடத்தப்பட்டிருக்கின்றார்கள்.

இதனால்,ஜனாதிபதியால் பொது மன்னிப்பு வழங்கப்படாத கைதிகள் சிலரும் விடுதலை செய்யப்பட்டிருக்கின்றார்கள்.

சிறு குற்றங்களைச் செய்து தண்டனை அனுபவிதது வருபவர்களுக்குப் பொதுமன்னிப்பு வழங்கப்பட வேண்டிய சமயத்தில் பாரிய குற்றங்களைச் செய்து கடும் தண்டனைகளை அனுபவிக்க வேண்டியவாகளுக்கு பொது மன்னிப்பு வழங்கப்பட்டிருககின்றது. இத்தகைய முறைகேடான செயல் இடம் பெறுவதறகும் சிறைச்சாலைத் திணைக்களத்திற்கும் ஜனாதுபதி செயலகத்திற்கும் இடையில் போதிய ஒத்துழைப்பு இல்லாதமையே பிரதான காரணமாகும் என கைதிகள் சுட்டிக்காட்டினார்கள்.

அதற்கு இத்தகைய நிலைமை குறித்து தீர ஆராய்ந்து தகுந்த நடவடிக்கை எடுக்கப்போவதாக நீதிஅமைச்சர் உறுதியளித்தார். இதேவேளை, சிறைக் கைதிகளுக்குப் பொதுமன்னிப்பு வழங்கப்பட்ட போது முறைகேடு இடம் பெற்றிருப்பதாக கைதிகள் குற்றஞ்சாட்டியதையடுத்து அது குறித்து விரிவாக ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நீதி அமைச்சர் செயலாளருக்கு உத்தரவிட்டுள்ளார்.

(உ-60,10)

## இராசி பலன்

**12.05.2004**

**(சித்திரை 30, புதன்கிழமை)**

**அட்டமி முற்பகல் 9.09 மணிவரை**

**அவிட்டம் பிற்பகல் 2.11 மணிவரை**

**இராகுகாலம் 11.54-1.24 மணிவரை**

**சுபநேரம் 4.24-5.54 மணிவரை**

**மேடம்**
பெருமையடைதல், எடுத்த காரியம் கைகூடும், போசன நன்மை, கலந்துரையாடல்.

**இடபம்**
முயற்சி கைகூடும், தொழில் சிந்தை, மேன்மை, நண்பர்கள் சந்திப்பு.

**மிதுனம்**
புதிய சிந்தை, அதிகபிரயாசை, கட்டுப்பாடு, பிரயாணம்.

**கடகம்**
ரோக நிலை, கலகம், வாகனபயம், புத்தி சாதுரியம்.

**சிங்கம்**
உறவினர் சந்திப்பு, காரிய அனுகூலம், தொழில் வருமானம், கீர்த்தி.

**கன்னி**
எடுத்தகாரியம் கைகூடும், ஆரோக்கியம், கௌரவமானநிலை, திடீர் நன்மை.

**துலாம்**
வியாபார நன்மை, குடும்பக் கவலை, எதிர்பாராத நன்மை,முயற்சி தாமதம்.

**விருச்சிகம்**
தாய்வழி உறவு, மனச்சோர்வு, காரிய தாமதம், சிந்தனை மிகுதி.

**தனுசு**
கலந்துரையாடல்,தொழிலில் ஆர்வம், எடுத்த கருமங்கள் கைகூடும்,சகோதரர் உதவி.

**மகரம்**
அதிக செலவு, கௌரவக்குறைவு, முயற்சி தாமதம், தொழில் கஷ்டம்.

**கும்பம்**
நண்பர்கள் சந்திப்பு, நல்ல முயற்சி, விருந்துபசாரம்,பிராயண நன்மை.

**மீனம்**
அமைதிக் குறைவு,சுப செலவு, பிரயாணம் காரியதாமதம்.

**(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)**

*வளவன்*

## பஞ்சவர்ண நரியார் மேடைக்கு வந்துவிட்டார்

(யாழ்ப்பாணம்)

செயல்திறன் அரங்கஇயக்கம் அண்மைக் காலமாக சிறுவர் அரங்க செயற்பாட்டில் ஈடுபட்டு வருகிறது. அநத வகையில் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்களின் வேண்டுகோளுக்கு இணங்க சிறுவர் அரங்கிற்கான நாடகம் ஒன்றை தயாரித்துள்ளது. "பஞ்சவாண நரியார்" என்னும் இந்த நாடகம் குழந்தை சண்முகலிங்கத்தின் எழுத்துரு நெறியாள்கையில் உருவாகியுள்ளது.

யாழ். மாவட்டத்தில் உள்ள 100 பாடசாலைகளில மேடைஏற்றுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ள இந்நாடகம் நேற்றுமுன்தினம் மு.ப. 10.00 மணிக்கு நெல்லியடி மெதடிஸ்த மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலையில் முதல்த் தடவையாக மேடையேறியுள்ளது.

தொடர்ச்சியாக இன்று 12ஆம் திகதி யா/ஞானசாரியார் வித்தியாலயம், யா/ புலோலி மெதடிஸ் மிஷன் தமிழ் கலவன் பாடசாலை ஆகியவற்றிலும், 14 ஆம் திகதி யா/ சென் தோமஸ் வித்தியாலயத்திலும், 17ஆம் திக்தி யா/யாக்கரை விநாயகர் வித்தியாலயம் ,யா/மாணிக்கவாசகர் வித்தியாலயம் ஆகிய வடமராட்சி பாடசாலைகளில் மேடையேறவுளளது. இந்நாடகம், சிறுவர்களுக்காக விஷேடமாகத் தயாரிக்கப்பட்ட ஒரு மணிநேர ஆற்றுகையாகும். சிறுவர்களுக்காகத் தயாரிக்கப்பட்ட நாடகததில் பெரியவர்களே சிறுவர்களாக நடிக்கினறார்கள். "நிறம்மாறிய நரி" என்ற சிறுவர் கதையை அடிப்படையாகக் கொண்டு இந்நாடகத்தின் எழுத்துரு அமைக்கப்பட்டுள்ளது.

"பஞசவர்ண நரியார்" நாடகத்தை மேடையேற்ற விரும்பும் ஆரம்பப்பாடசாலைகள், செயல்திறன் அரஙக இயக்கம்,"அருளகம்" ஆடியபாதம் வீதி, திருநெல்வேலியில் அமைந்துள்ள அலுவலகத்தில் தொடர்பு கொள்ளலாம் என செயல்திறன் அரஙக இயக்கத்தினர் தெரிவித்துள்ளனர். (உ)

## தரம்-5 புலமைப்பரிசில்

### பயிற்சி வினாத்தாள்

**வினா இல: 01**

**கூடிய புள்ளி ஒழுங்கில் மாணவர் பெயர் விபரம் வருமாறு.**

01. லோ.சுஜித்தா - மீசாலை வீரசிங்கம் ம.வி.
02. உ.தர்சிகா - சங்கானை சிவப்பிரகாச வி.
03. க.கிருஸ்யாயினி - பருத்தித்துறை வட இந்து ம.கல்லூரி.
04. ஆ.அனஸ்ரிக்கா - உடுவில் மகளிர் கல்லூரி.
05. வி.பிரவீனா - நீர்வேலி சி.சி.த.க. பாடசாலை.
06. சி.மதீசன் - கைதடி முத்துக்குமார சுவாமி வி.
07. ச.தர்ஷிகா - சங்கானை சிவப்பிரகாச வி.
08. வி.கிருஷ்ணதீபா - நயினாதீவு நாகபூஷணி வித்.
09. பு.லதுஷா - யாழ்.இந்து.ஆ. பாடசாலை.
10. இ.மோகன்ராஜ் - கொக்குவில் மேற்கு சி.சி.த.க.
11. க.லக்ஷனா - துன்னாலை காசிநாதர் வித்.
12. ம.சயந்தினி - சங்கானை சிவப்பிரகாச வித்.
13. இ.மயூரெதன் - கொக்குவில் மேற்கு சி.சி.த.க.பாடசாலை.
14. க.கெய்ஷிகா - வீரசிங்கம் ம.வித்.
15. த.விக்கினராஜ் - வல்வை றோ.க.த.க. பாடசாலை.
16. கே.சிவரூபன் - யாழ்.மத்திய கல்லூரி.
17. இ.தனுஷியா - யாழ்.இந்து ஆ. பாடசாலை.
18. சி.சஞ்சீவன் - கோப்பாய் நாவலர் வித்.
19. பா.அனிதா - வடம[illegible]சி இந்து [illegible]ரி.
20. ச.லக்சிகா - திரு[illegible] இ.கு.க. பாட.
21. த.நினுஜா - நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை. வித்.
22. தெ.கனிஸ்ரன் - கோண்டாவில் சீ.சீ.த.க. பாடசாலை.
23. வி.ஐஸ்வரியா - ஆனைப்பந்தி மெ.மி. வித்தி.
24. ந.டயஸ் - சாவகச்சேரி இ.ஆரம்ப பாடசாலை.
25. மு.காயத்திரி - ஆனைப்பந்தி மெ.மி. வித்தி.
26. இ.கிருபாகரன் - துன்னாலை மேற்கு மெதடிஸ் த.க.பாட.
27. நி.நிவேதா - யாழ்.இந்து ம.ஆ.பாடசாலை.
28. இ.சிந்துஜா - மானிப்பாய் சோதிவேம்படி வித்.
29. நா.சங்கீர்த்தனா - உசன் இராமநாதன் ம.வித்தி.
30. ஆ.டயந்தன் - யாழ்.மத்திய கல்லூரி.
31. கு.சலோமிசானியா - யாழ்.புனித தெரேசா ம.கல்லூரி.
32. த.திவாகர் - துன்னாலை காசிநாதர் வித்.
33. செ.பத்மப்பிரியா - கரம்பொன் சிறியபுஸ்ப மகளிர் ம.வி.
34. வி.கஜனி - வேலணை சைவப்பிரகாச வித்.
35. ப.பிரவீனா - நெல்லியடி மெ.மி.த.க. பாடசாலை.
36. சி.ஜனகன் - வவுனியா தமிழ் ம.வித்தி.
37. த.கலாநிதி - யாழ்ப்பாணக் கல்லூரி வட்டுக்கோட்டை
38. வி.டினேஸ் - ஆனைப்பந்தி மெதடிஸ் மி.வி.
39. சு.சதுர்ணாதேவி - யாழ்.புனித ஜோன் பொஸ்கோ.
40. க.றுதீஸ் - யாழ்.புனித ஜோன் பொஸ்கோ.ம.வி.
41. ப.துவாகரன் - யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை.
42. க.தயானா - யாழ்.இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை.
43. பா.பாலபத்மன் - புலோலி புற்றாளை ம.வித்தி.
44. சி.சிவதர்சன் - கரந்தன் இராமுப்பிள்ளை வித்.
45. செ.சாருஜா - வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி.
46. க.ரமனுஜா - புத்தூர் ஸ்ரீசோமஸ்கந்தா கல்லூரி.

### வினாத்தாள் 01இன் விடைகள்

01. (3)
02. (3)
03. இராமையா.
04. பொன்னையா.
05. 1243
06. (5)
07. (4)
08. (5)
09. குரங்கு
10. முயல்
11. கவலைப்பட்டது/ வேதனை அடைந்தது.
12. **Monkey**

| | | | |
|---|---|---|---|
| 13. | 48 | 27. | ரூபா 85.50 |
| 14. | 50 | 28. | 100m |
| 15. | 10,40 | 29. | தெற்கு |
| 16. | (4) | 30. | 30 |
| 17. | (2) | 31. | (5) |
| 18. | (3) | 32. | (1) |
| 19. | (3) | 33. | (4) |
| 20. | (4) | 34. | (4) |
| 21. | (4) | 35. | (3) |
| 22. | (1) | 36. | (4) |
| 23. | (3) | 37. | (2) |
| 24. | (1) | 38. | (1) |
| 25. | (2) | 39. | (3) |
| 26. | 300 | 40. | (2) |

# “எதிர் காலக் கல்வி வாழ்வியலில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை முடிவுகள்”

அண்மைக் காலங்களில் க.பொ.த. சாதாரண தர, உயர்தர பரீட்சைகளின் முடிவுகள் கல்வித்துறை சார்ந்தவர்களால் ஆய்வுக்குட்படுத்தப்பட்டு அதன் பெறுபேறுகள் ஊடகங்கள் வாயிலாக வெளியிடப்பட்டும் வருகின்றது. ஆயினும் இவை எல்லாவற்றையும் விட பாடசாலைகள், தனியார் கல்வி நிறுவனங்கள், தனித்துவமும், மகத்துவமும் மிக்க ஆசிரியர்களின் அளவு கோலாக கட்டியங்கூறி அனைவரையும் அளவளாவ வைப்பதில் சுட்டிக்காட்டத் தக்கதாக அமைந்துள்ளது. தரம் ஐந்து மாணவர்களின் புலைப்பரிசில் பரீட்சையே என்பது, சொல்லித் தெரிய வேண்டியதொன்றல்ல. இளம் சிறார்கள் மத்தியிலும் பெற்றோர்கள் மத்தியிலும் இப்பரீட்சையின் பெறுபேறுகள் எந்தளவுக்கு மகிழ்சியை ஏற்படுத்துகின்றதோ அதே பலமடங்கு துக்கத்தையும் இவர்களிடையே தோற்றுவிப்பது கவலைக்குரியது என்பதைத் தெளிவு படுத்துவதும், பரிகாரம் காண்பதுமே இக்கட்டுரையின் முக்கிய நோக்கமாகும்.

## அரச சுற்று நிருபப் பிரமாணங்கள்

இப்பரீட்சையானது, தேசிய பாடசாலைகளுக்கும், பிரபல்யமான பாடசாலைகளுக்கும் மாணவர்களைத் தேர்ந்தெடுப்பதற்கும் வினைத்திறன் மிக்க வறிய மாணவர்கட்கு உதவி வழங்குவதற்குமான ஐந்தாம் தர மாணவர்கட்கான பரீட்சை என இது வழங்கப்படும். அரசாங்கத்தினால் வரையறுக்கப்பட்ட குறிப்பிட்ட அளவான மாணவர்கட்கு மாவட்ட அடிப்படையில் உதவிப் பணத்தை வழங்குவதற்கும், மேலும் சிறந்த வசதிகளையுடைய, தேசிய மட்டத்திலே பாடசாலைகளிலுள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கு மட்டுமே இப்பரீட்சையில் கிடைக்கப்பெற்ற மொத்தப் புள்ளிகள் அடிப்படையாகக் கொள்ளப்படுமென அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இப்பரீட்சையின் நோக்கமாக பின்வரும் அம்சங்கள் விதந்துரைக்கப்பட்டுள்ளன.

இதில் சித்தியடைவோருக்கு ரூபா 24 ஆயிரமும் அதற்குக் குறைவான வருமானம் உடைய பெற்றோர்களின் பிள்ளைகள் அல்லது சட்ட ரீதியான பாதுகாவலரின் பிள்ளைகள் ஆகியோருக்கு உதவிப் பணம் வழங்குதல், தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளில் தரம் ஆறுக்கான மாணவர்களைத் தெரிவு செய்தல் என்பனவாகும். ஆனால், இந் நோக்கம் இன்று பரவலாகி, விரிவடைந்து பல விளைவுகளையும், தாக்கங்களையும் சமூகத்தில் ஏற்படுத்தி வருகின்றது.

## பரீட்சையின் யதார்த்த நிலை

கல்வி உலகில் தடம்பதித்த பிள்ளையொன்று, முதன் முதலாக அகில இலங்கை ரீதியில் (தேசிய ரீதியில்) தோற்றுகின்ற முதலாவது பரீட்சை இதுவாகும். 10-11 வயதுக்குட்பட்ட பிள்ளைகள் பெற்றோர்களின் நெருக்கீடுகளுக்குக் கட்டுப்பட்டு இப்பரீட்சைக்குத் தோற்றுகிறது. பெரும்பாலான பிள்ளைகளின் பெற்றோர்கள் வயதில் குறைந்தவர்களாகவும் இளமைத் துடிப்புடனும் காணப்படுவதும், இவர்களது பிள்ளைகள், தேசிய ரீதியிலான பரீட்சையில் முதன் முதலாகத் தோற்றுவதாலும் பெற்றோர்கள் இடையேயான கௌரவப் பிரச்சினையும், வகை தெரியாத போட்டி நிலையும் சமூகத்தில் நிலவி வருவதால் இந்நிலைமை சந்தர்ப்பத்தைப் பொறுத்து போட்டியைவிட பொறாமையையே ஏற்படுத்தியுள்ளது. இதனை மையப்படுத்தி ஈடு செய்வதற்காக தரம் 5இல் அப்பிள்ளை காலடி எடுத்து வைத்தவுடன் காலைநேர வகுப்பு, பாடசாலைக் கல்வி, பாடசாலையில் மேலதிக வகுப்பு அதன்பின் தனியார் கல்வி விடுமுறை தினங்களில் மேலதிகமான வகுப்பு பல்வேறு ஆசிரியர்கள், நிறுவனங்களின் வினாத்தாள் பயிற்சிகள், மாதிரிப் பரீட்சைகள் என்ற வகையில் பல்வேறு சுமைகளைத் தாங்க வேண்டிய நிலைக்குப் பிள்ளை தள்ளப்படுகின்றது. இதனால் பிள்ளைகள் விளையாடவோ, சமூக, கலாசார விழுமியங்களில் பங்குபற்றவோ மகிழ்ச்சியுடன் செயற்படவோ பிள்ளைகளைப் பெற்றோர் அனுமதிப்பதில்லை. இந் நிலை மாணவர்களிடையே பாரிய நெருக்கீட்டை உருவாக்குகின்றது என்பதை இத்தரப்பினர் உணர்வதில்லை என அறிய வருவதுடன் சிறுவர் சார்ந்த அமைப்புக்களும் இதனை உறுதிப்படுத்துகின்றன.

## பரீட்சை ஒழுங்கும் பாடத் திட்டமும்

ஒரே நாளில் நடைபெறும் இப்பரீட்சை இரண்டு வினாத்தாள்களை உடையது (உள்ளடக்கியது). நேரசூசிகளுக்கு அமைவாக முதலாம் வினாப் பத்திரம் 9.30-10.45 வரை 45 நிமிடங்களை உள்ளடக்கியது. இரண்டாம் வினாத்தாள் 10.45-12.00 மணி வரை 1.15 நிமிடங்களை உள்ளடக்கியதாகும். முதலாம் வினாப்பத்திரம் மாணவர்கள் கற்கும் திறனை மதிப்பீடு செய்யும் வகையிலான வினாக்களைக் கொண்டது. இரண்டாம் வினாப் பத்திரம் 1ஆம் தரம் தொடக்கம் 5ஆம் தரத்தின் இரண்டாம் தவணை வரையுள்ள சகல பாடத்திட்டங்களும் உள்ளடங்கலாகத் தயாரிக்கப்பட்டிருக்கும். இலங்கை பரீட்சைத் திணைக்களத்தினால் தேசிய மட்டத்தில் மாவட்டங்களுக்கு இடையேயான வெட்டுப்புள்ளிகளை அடிப்படையாகக் கொண்டு பாடசாலைகளுக்கு மாணவர்களைத் தேர்ந்தெடுப்பதற்கும், மாணவர்கட்கு உதவிப்பணம் வழங்குவதற்குமான 5ஆம் தர மாணவர்கட்கு நடாத்தப்படும் பரீட்சை என 2004 ஆம ஆண்டின் பிரமாண அறிக்கை தெரிவிக்கின்றது. அதன்படி வழமைபோன்று இவ்வருடம் ஆகஸ்ட் மாதம் இப்பரீட்சை நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பரீட்சையின் தன்மை

புலமைப்பரிசில் பரீட்சையானது அரச சுற்று நிருபப் பிரமாணங்கட்கமைவாக, வருடம் தோறும் ஆவணி மாதத்தில் நடைபெற்று வருகின்றது. இப் பரீட்சையின் நோக்கம் பற்றி மேலே தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இப் பரீட்சையின் சித்திக்கு, தரம் ஐந்து வரை கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளே முழுமையான பங்களிப்பினை வழங்குகின்றன என்பது தவறு. முதன்மை நிலையொன்றில் (தரம் I, தரம் II) முழுமையான பாடத்திட்டத்திற்கு அமைவான பயிற்சிகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும். இங்கு விளையாட்டுடன் கூடிய கல்விக்கே கூடுதல் முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளது.

இங்கே கற்றல், கற்பித்தல் செயற்பாடுகள் இடையறாத தொடர்ச்சியாதலால் ஓர் அந்தத்தில் ஒரு பிள்ளை தான் கற்றக விரும்புவதைத் தேர்ந்தெடுக்க சுதந்திரம் உடையது. மறு அந்தத்தில் ஒரு ஆசிரியர் முழு வகுப்புக்குமாக அமைக்கப்பட்ட பாடம் ஒன்றின் சகலதையும் கற்பிக்கின்றார். விதந்துரைக்கப்பட்ட நடைமுறை, இவைகள் இரண்டுக்குமிடையில மாணவர் மையப்படுத்திய கவனம் செலுத்துதலில் உள்ளது. கற்பித்தலில் பிரதான உத்திகள் மூன்றை இனங்காண முடியும். I வழி காட்டப்பட்ட விளையாட்டுக்கள், II செயற்பாடுகள் IIIஎழுத்து வேலைகள். முதன்மை நிலையொன்றில் வழிகாட்டப்பட்ட விளையாட்டுக்களும் மற்றும் செயற்பாடுகளும், எழுத்து வேலைகளைவிட மேலும் முக்கியத்துவம் பெறுகின்றன.முதன்மை நிலை இரண்டில் சகல கற்பித்தல் உத்திகளும், அண்ணளவாக, சமனான முக்கியத்துவத்தைப் பெறுகின்றன. முதன்மை நிலை மூன்றில் செயற்பாடுகளும், எழுத்து வேலையும், வழிகாட்டப்பட்ட விளையாட்டுக்களைவிட கூடிய முக்கியத்துவம் பெறுகின்றன. நிலை ஒன்று, இரண்டு, மூன்று ஆகியவற்றின் ஒரு தொகுதிப் பிள்ளைகளுக்கு ஒரு ஆசிரியரே பொறுப்பாக இருப்பார். இது அத்தியாவசிய தேர்ச்சிகளின் புலமை மட்டத்தைச் சகல மாணவர்களும் எய்த

**மு.விக்னேஸ்வரன்**
**கோப்பாய்**

வகை செய்யும் என்பதிலிருந்து புலமைப்பரிசில் பரீட்சையின் வெற்றிக்குத் தனியொரு ஆசிரியரின் சேவையும், பங்களிப்புமே என்ற தீர்ப்பு பொருத்தமற்றது. ஆரம்பக் கல்வி ஆசிரியர்கள் அனைவரினதும் கூட்டுச் செயற்பாடே சித்திக்குக் காரணமாக அமைந்துள்ளது என்பதை சமூகம் அங்கீகரிக்க வேண்டும்.

## பெற்றோர்கள் அறிய வேண்டியவை

புலமைப்பரிசில் பரீட்சையின் வெற்றியிலும், தோல்வியிலும் மனச்சோர்படைபவர்கள் பிள்ளைகளை விட பெற்றோர்களே. இந்நிலை தேவையான ஒன்றல்ல. புலமைப்பரிசில் பரீட்சையின் முடிவே கல்வியின் வாழ்வியலை நிர்ணயிப்பதில்லை. அண்மைக் கால ஆய்வுகளின்படி புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களைவிட சித்தியடையாத மாணவர்களே க.பொ.த.சாதாரண தர, உயர்தரப் பரீட்சைகளில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுள்ளனர். புலமைப் பரிசில் பரீட்சையின் சித்தியை நிர்ணயிப்பது வெட்டுப்புள்ளியாகும். இந் நிலையில் வெட்டுப்புள்ளிக்கு அண்மித்த புள்ளியைப் பெறுபவர் பாதிக்கப்படுவது இயலாததொன்று. ஆனால், இதற்குத் தீர்வு காண்பது இலகுவானதல்ல. எனவே இந்நிலைமைக்குப் பொருத்தமானது திருப்தி என்ற வடிவமற்ற வஸ்துவேயாகும். மாறாகச் சித்தியடைந்த பிள்ளைகளைப் பாராட்டுவதையோ வெற்றிக்குக் காரணமாக அமைந்தவர் என்ற ரீதியில் தை மாதம் தொடக்கம் ஆடி மாதம் வரை ஏழு மாதங்கள் கற்பித்த தரம் ஐந்து ஆசிரியரை மட்டும் வாழ்த்திப் பரிசுப் பொருட்களை விழாக்களில் வழங்குவதையோ தவிர்த்துக்கொள்ள வேண்டும்.

புலமைப் பரிசில் பரீட்சையில சித்தியடைந்தாலும் அடையாமல் விட்டாலும் கூட மாணவர்களின் விருப்புக்களையும், பிரச்சினைகளையும் இனங்கண்டு பொற்றோரும், மூத்தோரும் தமது பிள்ளைகளின் அன்றாடக் கருமங்களில் பங்காளிகளாகி மாணவர்கட்கும், ஆசிரியர்கட்கும் ஒட்டுமொத்தமாக பாடசாலைக்கும் துணை புரிவதன் மூலம் பண்பாட்டாலும், கலாசார விழுமியங்களாலும் கூடிய நல்லதோர் சமுதாயத்

ஊழையும் உட்பக்கம் காண்பர் உலைவின்றித்
தாழாது உஞற்று பவர் -குறள்

வலம்புரி

# அதிகார தற்துணிவோடு ஜனாதிபதி செயற்பட வேண்டும்

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆட்சி ஏற்ற கையோடு சமாதான முயற்சிகளுக்கான ஏற்பாடுகள் மிகத் துரிதகதியில் நடைபெற்று வருகிறது. தடைப் பட்டுப் போயுள்ள சமாதான முயற்சிகளை மீண்டும் ஆரம்பிக்கும் நோக்குடன் நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர் ஜோன் பீற்றர்சன் இலங்கைக்கு வருகை தந்து ஜனாதிபதி, பிரதமர், விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் ஆகியோருடன் முதற் சுற்றுப் பேச்சுக்களை நடத்தியுள்ளார்.

நோர்வே வெளிவிவகார அமைச்சரின் இலங்கை வருகை சமாதான முயற்சியில் ஓர் முக்கிய நிகழ்வாகும். அதிலும் ஜனாதிபதி, பிரதமர், தலைவர் பிரபாகரன் ஆகியோருடன் நடத்திய பேச்சுக்கள், சமாதானப் பேச்சுக்களை முன்னெடுக்கமுடியுமா? என்ற கேள்விக்கு விடை தருவதாகவும் அமையும்.

அவ்வகையில் இருதரப்புச் சந்திப்புக்களையும் முடித்துக்கொண்ட நோர்வே வெளிவிவகார அமைச்சர் தனது முயற்சியில் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

அமைச்சரின் இந்நம்பிக்கை சமாதானப் பேச்சுக்களை ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்த மக்களுக்கு மனஆறுதலைத் தருவதாக உள்ளது.

இருந்தும் விடுதலைப் புலிகள் முன்வைத்த இடைக்கால நிர்வாகசபைத் திட்ட வரைபிலிருந்து பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கையை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியுடன் இணைந்திருக்கும் ஜே.வி.பி எதிர்த்து வருகின்றது.

இந்த எதிர்ப்பு நிலை நோர்வே அமைச்சரால் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுக்குத் தெரிவிக்கப்பட்டது. விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரை அவர்கள் இடைக்கால சபைத்திட்டவரைபிலிருந்து பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட வேண்டும் என வலியுறுத்திக் கூறியுள்ளனர்.

இந்நிலையில் அரசினதும் விடுதலைப் புலிகளினதும் கொள்கைகளுக்கிடையில் சில முரண்பாடுகள் இருக்கவே செய்கின்றது. இந்த முரண்பாடுகளுக்கு தீர்வு காண்பதன் மூலமே சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படக் கூடிய சூழ்நிலை உருவாகும்.

எனினும் இங்கு முரண்பாடென்பதில் தீர்வு காண வேண்டிய பொறுப்பு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவிடமே உண்டு. கடந்த ஐக்கிய தேசிய முன்னணி அரசினால் ஏற்றுக் கொள்ளப்பட்டு பேச்சை ஆரம்பிக்கச் சம்மதம் தெரிவிக்கப்பட்ட புலிகளின் இடைக்கால சபைத்திட்ட வரைபை புதிய அரசு அடியோடு ஒதுக்கிவைத்துவிடமுடியாது. விடுதலைப் புலிகளினால் இடைக்கால சபைத்திட்ட வரைபு முன்வைக்கப்பட்டபோதும் சமாதானப் பேச்சுக்களின் அனுசரணையாளராக நோர்வே பணியாற்றி யிருந்தது.

இப்போதும் நோர்வேயே சமாதானப் பேச்சுக்களின் அனுசரணையாளராகச் செயற்படுவதால் புலிகளின் இடைக்கால சபைத்திட்ட வரைபிலிருந்து சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்க ஜனாதிபதி முன்வரவேண்டும்.

தமிழ் மக்களின் ஏகப்பிரதி நிதிகள் விடுதலைப் புலிகளே, அவர்களுடன் மட்டுமே சமாதானப் பேச்சுக்களைத் தொடரவேண்டும் என்ற முடிவை எடுத்த ஜனாதிபதிக்கு விடுதலைப்புலிகளால் முன்வைக்கப்பட்ட தீர்வுத்திட்டத்திலிருந்து பேச்சுக்களைத் தொடர்வதில் எந்தவித தடைகளும், நெருக்கீடுகளும் இருக்க நியாயம் இல்லை.

இலங்கையின் அரசியல் யாப்பைப் பொறுத்தவரை நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி சர்வவல்லமை பொருந்தியவராகக் காணப்படுகின்றார். அவர் தனக்கிருக்கக்கூடிய அதிகாரத்தின் ஒரு சிறிய பகுதியை மட்டும் பாவித்து பாராளுமன்றத்தைக் கலைத்து பொதுத் தேர்தலை நடத்தினார். தனக்கு இருக்கக்கூடிய அதிகாரத்தின் பெரும்பகுதியை தான் இன்னமும் பயன்படுத்தவில்லை எனக் கூறிய ஜனாதிபதி தனக்கு இருக்கக்கூடிய அதிகாரத்தை சமாதானத்திற்காக பயன்படுத்த வேண்டும்.

ஜனாதிபதி தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி சமாதானப் பேச்சுக்களை முன்னெடுப்பாராக இருந்தால் ஜே.வி.பி, ஹெலஉறுமய போன்ற இனவாதக் கட்சிகளால் அதனைத் தடுக்கவே முடியாது போகும். எனவே ஜனாதிபதி தனது அதிகாரத்தைத் தற்துணிவோடு பிரயோகித்து சமாதானப் பேச்சை முன்னெடுத்து நாட்டில் நிரந்தர சமாதானத் தீர்வைக்கான முன்வரவேண்டும்.

# அமெ. சென்ற அமைச்சர் கதிர்காமர் இன்று முக்கிய அமைச்சர்களைச் சந்திக்கிறார்

(கொழும்பு)

அமெரிக்காவுக்கான 5நாள் விஜயமென்றினை மேற்கொண்டிருக்கும் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ் மன் கதிர்காமர் இன்று அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் கொலின் பவலைச் சந்தித்துள்ளார். அதனைத் தொடர்ந்து பிரதி வெளிவிவகார அமைச்சர் ரிச்சர்ட் ஆர்மிடேஜையும் சந்திக்கவுள்ளார். இலங்கையின் சமாதான நடவடிக்கைகள் பற்றி இச் சந்திப் பின்போது ஆராயப்படவுள்ளது.



அத்துடன், அமெரிக்க வெளிவிவகார அமைச்சின் பயங்கரவாதத் தடுப்பு நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கும் பசோ ப்ளக் மற்றும் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ரனலிசா றைஸ் ஆகியோருடனும் கதிர்காமர் சந்திக்கவுள்ளார்.

செனற் சபையின் வெளியுறவுக் கொள்கைகளுக்கான குழுவின் உறுப்பினரான ரிச்சர்ட் லூகட் அமெரிக்காவின் துணை வர்த்தகப் பிரதிநிதியான அஸ்லி வில்ஸ் இலங்கைக்கா ன முன்னாள் தூதுவரும், ஜோர்ஜ் புஷ் வொஷிங்டன் பல்கலைக்கழகத்தின் சர்வதே அலுவல்களுக்கான எலியர்ட் கல்லூரியின் பணிப்பாளருமான கார்ல் இன்ரபோல் ஆகியோரையும் அமைச்சர் கதிர்காமர் சந்திக்கவுள்ளார்.



இதேவேளை, கடந்த மாதம் இறுதிப் பகுதியில் இந்தியாவுக்குச் சென்று வந்த அமைச் சர் கதிர்காமர் இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பில் அங்கு பல்வேறு தரப்புக்களையும் சந்தித்துப் பேசியதுடன் தமிழர்களின் ஏகப் பிரதிநிதிகள் புலிகள் தான்என்ற கருத்தையும் முதல் தடவையாகக் கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (உ-63,8)

# வெலிக்கடைச் சிறை கைதி தப்பியோட்டம்

(கொழும்பு)

வெலிக்கடைச் சிறைச்சாலையில் இருந்து சிறைக் கைதியொருவர் தப்பிசென்றுள்ளதாக தெரிவிக்கப் படுகிறது. கொழும்பு அளுத்தகடை மஜிஸ்திரேட் நீதி மன்றத்தினால் 4ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கபட்ட கைதியே இவ்வாறு தப்பிச் சென்றுள்ளார் எனத் தெரியவருகின்றது.

இதேவேளை, இந்தக் கைதி தப்பிச் சென்ற விடயத்தை ஒரு சில அதிகாரிகள் நலன்கருதி சிறைச்சாலை வட்டாரங்கள் மறைத்து விட்டதாகவும் கூறப்படுகின்றது.

இதற்கிடையில், கொழும்பு கொள்ளுப்பிட்டியைச் சேர்ந்த இந்நபர் பற்றி சிறைச்சாலை அதிகாரி ஒருவர் தகவல் வெளியிடுகையில், இந்நபர் தனக்கு விதிக்கப்பட்ட 4ஆண்டுகள் சிறைத்தண்டனை தொடர்பாக மேன்முறையீடு செய்துள்ளார்.

இவர் கைதியாக சிறைச்சாலையில் இருந்த போதும் சில அதிகாரிகளின் நடவடிக்கைகளால் சிறைச்சாலைக்குள் மிகச் சுதந்திரமாக நடமாடியுள்ளார்.

சிறைச்சாலை உயர் அதிகாரி ஒருவருக்கு பணிவிடை செய்யும் பொறுப்பையே இவர் வகித்து வந்தார்.

அத்துடன் தப்பிச் செல்லும் தினத்துக்கு முன் தினம் வெளியே சென்று அண்மையிலிருக்கும் சிகையலங்கார நிலையத்திற்கு சென்று தலைமுடியைத் திருத்தியுள்ளார். இக்கைதி தப்பிச் சென்றமை தொடர்பாக இதுவரை விசாரணைகள் ஏதும் நடத்தப்படவில்லை என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (உ-10)

# மீளக் குடியமர்ந்தோருக்கு ஆடுகள் அன்பளிப்பு

(பாலாலி)

கைதடி நாவற்குழி கிராமத்தில் இருந்து யுத்தத்தின் காரணமாக இடம் பெயர்ந்த மக்களை மீண்டும் அவர்களது இருப்பிடங்களில் மீளக்குடியமர்த்தும் நடவடிக்கையில் இராணுவத்தினர் ஈடுபட்டுள்ளனர்.

இவ்வாறு மீளக் குடியமர்த்தப் பட்டுள்ள மக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களில் ஒத்துழைப்புடன் பெற்றுக் கொடுப்பதிலும் இராணுவத்தினர் ஈடுபட்டுள்ளனர்.

மேலும், கடந்த வெசாக் பௌர்ணமி தினத்தை முன்னிட்டு மேற்படி கிராமத்தில் மீளக்குடியமர்ந்துள்ள மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் வகையில் 52வது சேனையகத்தின் கட்டளையிடும் அதிகாரியின் தலைமையில், அண்மையில் ஆடுகள் அன்பளிப்பு செய்யப்பட்டன.

13ஆடுகளும் குட்டிகளும் இவ்வாறு கிராம மக்களுக்கு பெற்றுக் கொடுக்கப்பட்டது. (உ)

## தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்

உலகங்கள் வரும் போகும். அதனால் என்ன? ஆன்மா வாழ்கிறது விரிவடைந்து கொண்டே இருக்கிறது. உலகங்கள் ஆன்மாவிற்குள் நுழைந்தாக வேண்டும் கடலில் நீர்த்துளிகள் மறைவது போன்று அவை அங்கே மறைந்தாகவும் வேண்டும்.

சுவாமி விவேகானந்தர்.

# வன்னியில் பெற்றோலுக்கு தட்டுப்பாடு நிலவுகிறது!

(கொழும்பு)

வன்னிப்பகுதியில் பெற்றோல் தட்டுப்பாடு நிலவுவதாக பாவனையாளர்கள் தெரிவிக்கின்றனர். பரந்தன் பகுதியில் அமைந்துள்ள எரிபொருள் நிரப்பும் நிலையத்தில் அண்மைய நாட்களாக பெற்றோல் இல்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

மாங்குளம், முல்லைத்தீவு போன்ற எரிபொருள் நிரப்பு நிலையங்களிலும் இதே நிலை காணப்படுவதால் பாவனையாளர்கள் பெரும் சிரமத்தை எதிர்நோக்கி வருகின்றனர். போர்க்காலத்தில் தான் எரிபொருளுக்கு வன்னிப்பகுதியில் தட்டுப்பாடு நிலவியது எனினும், இன்றைய சமாதான காலத்திலும் இந்த நிலை தொடர்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இராணுவத்தினர் மட்டுப்படுத்தி எரிபொருட்களை அனுப்;வதாலும் தற்போது வன்னிப்பகுதியில் பாவனையாளர்கள் அதிகரித்துள்ளமையும் இதற்கு பிரதானமான காரணமாக உ ளளதென தெரிவிக்கப்படுகிறது.(உ)

# கைதிகளுக்கு அநீதி இழைக்கப்பட்டதா? ஆராய மூவர் கொண்ட குழு நியமனம்

(கொழும்பு)

வெலிக்கடைச் சிறைச் சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளுக்கு அநீதி இழைக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டுகள் குறித்து ஆராய்வதற்கென மூவர் அடங்கிய குழுஒன்றை நீதி அமைச்சர் ஜோன் செனிவிரத்தின நியமித்துள்ளார்.

இந்தக் குழுவுக்கு முன்னாள் சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் எச்.ஜி.தர்மராசா தலைமை தாங்குகின்றார்.

இந்தக் குழு பொதுமன்னிப்பு வழங்கும் விடயத்தில் இந்தக் கைதிகளுக்கு அநீதி இழைக்கப்பட்டிருக்கின்றதா? என்பது குறித்து ஆராய்ந்து சிபார்சுகளை சமர்பிக்கவுள்ளது.

இதேவேளை, ஆயுட்கால சிறைக்கைதிகளின் தண்டனையைத் தளர்த்துதல், பொதுமன்னிப்பு வழங்கும் போது பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் ஆகிய விடயங்களையும் இந்தக்குழு ஆராயும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (உ-61,10)

# கறுப்பினக் குழந்தையின் காலை மிதித்த இலங்கையர் அடித்துக் கொலை

(கொழும்பு)

இங்கிலாந்தில் கறுப்பு இனக் குழந்தை ஒன்றின் கால்களை மிதித்த இலங்கையர் ஒருவர் குழந்தையின் தந்தையாரால் அடித்துக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

கடந்த 5ஆம் திகதி இங்கிலாந்தின் விம்பிள்டன் புகையிரத நிலையத்தில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் 4வருடங்களாக இங்கிலாந்தில் தொழில் புரிந்துவரும் இலங்கையரான விபுலபிரசன்ன (வயது 43) என்பவரே அடித்துக் கொலை செய்யப்பட்டவராவார்.

பிரஸ்தாப நபர் புகையிரத நிலையத்திற்கு தனிப்பட்ட விடயமாகச் சென்றுகொண்டிருந்த போது அப்பகுதியில் விளையாடிக் கொண்டிருந்த கறுப்பு இனக்குழந்தையின் கால்களை தவறுதலாக மிதித்துவிட்டார்.

இதனால் குழந்தை கதறி அழுததைக் கண்டு ஆத்திரமடைந்த அக்குழந்தையின் தந்தை கண்டபாட்டில் தாக்கியதிலேயே அவர் மரணமானார்.

சம்மந்தப்பட்ட கொலையாளி நேற்று இங்கிலாந்து நீதி மன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டார்.

இதேவேளை, கொலை செய்யப்பட்டவரது சடலம் இன்னமும் இலங்கையில் உள்ள அவரது வீட்டிற்கு அனுப்பிவைக்கப்படவில்லை எனத் தெரியவருகிறது. (உ-4,60)

# நலன்புரி நிலையங்களுக்கு ரவிராஜ் எம்.பி நேரில் விஜயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் என்.ரவிராஜ் கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ். மாவட்டத்தில் உள்ள நலன்புரி நிலையங்களைச் சென்று பார்வையிட்டார்.

உரும்பிராய், மருதனார்மடம், கோப்பாய் ஆகிய பகுதிகளில் உள்ள வலி. வடக்கு மக்கள் தங்கியிருக்கின்ற 4நலன்புரி நிலையங்களுக்குச் சென்ற ரவிராஜ் எம்.பி. அங்கு மக்கள் படும் துன்பதுயரங்களை நேரில் பார்வையிட்டார்.

அப்போது, அடிப்படை வசதிகள் எதுவுமற்ற நிலையில் தாம் நீண்டகாலமாக அனுபவித்து வரும் இடர்களை இடம்பெயர்ந்த மக்கள் விபரிக்கனர். (உ-16)

# வவுனியாவில் காணாமல் போன 4 சிறுமிகளும் கண்டியில் மீட்பு

(வவுனியா)

கடந்த 3 ஆம் திகதியன்று வவுனியாவில் காணாமல் போன சிறுமிகள் நால்வரும் கண்டிப் பகுதியில் இருந்து மீட்கப்பட்டுள்ளனர். வவுனியா பூந்தோட்டம் நலன்புரி நிலையம் 5 ஆம் யூனிட்டில் வசிககும் 14 வயதுடைய நடராசா அனுஷா, 13 வயதுடைய தேவசகாயம் இரத்தினேஸ்வரி, 17 வயதுடைய சிவலிங்கம் செல்வராணி ஆகியோரும் அண்ணா நகரைச் சேர்ந்த 14 வயதுடைய சந்தானம் பிரியங்கா ஆகிய சிறுமிகள் நான்கு பேரும் காணாமல் போனதாக இவர்களின் பெற்றோர்கள் முறைப்பாடு செய்திருந்தனர்.

அத்தோடு மேற்படி சிறுமிகள் தமிழீழ விடுதலைப் புலிகளால் இயக்கத்தில் இணைத்துக் கொள்ளப்பட்டதாகவே குற்றம் சாட்டப்பட்டதுடன் போர்நிறுத்த கண்காணிப்புக்குழு, யுனிசெப், அனைத்துல செஞ்சிலுவைச் சங்கம், வவுனியா பொலிசார் என அனைத்து தரப்பினரிடமும் இது குறித்து முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்நிலையில் மேற்படி நான்கு சிறுமிகளும் கண்டியிலிருந்து மீட்டு வரப்பட்டுள்ளனர். இந்த நான்கு சிறுமிகளும் தமது சிநேகிதியின் தாயார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அவரை பார்க்க வேண்டுமெனக் கூறி தங்கச் சங்கிலியொன்றை வவுனியாவிலுள்ள தனியாரின் வடிக்கடையொன்றில் அடகு வைத்து 7,200 ரூபாய் பணத்தை பெற்றே கண்டிக்கு சென்றுள்ளனர்.

அங்குள்ளவர்கள் சிறுமிகளை விசாரித்து அம்பாறை மாவட்ட திருநாவுக்கரசு நாயனார் குருகுல ஆதீனத்தில் சேர்ப்பித்துள்ளனர். குருகுல ஆதீனத்தினர், பெற்றோருடன் தொடர்பு கொண்டு தெரியப்படுத்தியதையடுத்து பெற்றோர் அந்த சிறுவர் இல்லத்திற்கு சென்று பிள்ளைகளை அழைத்து வந்துள்ளனர்.

அத்தோடு தம்மால் மேற்படி சிறுமிகள் காணாமல் போனது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட முறைப்பாடுகள் அனைத்தையும் வாபஸ் பெற்றதுடன் அவர்களிற்கும் நடந்த சம்பவத்தை எடுத்துக் கூறியுள்ளனர். அதேவேளை விடுதலைப் புலிகளிற்கு ஏற்பட்ட அசௌகரியங்களிற்காக விடுதலைப் புலிகளின் மகளிர் அரசியற்துறையிடம் மன்னிப்பும் கேட்டுள்ளனர். (த)

## சயனைட் அருந்தவில்லையாம்

(யாழ்ப்பாணம்)

நேற்றைய வலம்புரியில் சயனைட் அருந்திய இளமபெண் மரணம் என்ற செய்தி தொடர்பில் மரணமான பெண்ணின் உறவினர்கள் எனக் கூறி நேற்றுப் பிற்பகல் வலம்புரி அலுவலகத்திற்கு வந்தவர்கள் பிரஸ்தாபப் பெண் நஞ்சருந்தியதால் மரண மானதாகவும் அவர் சயனைட் அருந்தவிலலை எனவும் தெரிவித்துள்ளனர்.(ந)

# ஜப்பான் தூதுவர் கிளிநொச்சியில்

(கிளிநொச்சி)

ஜப்பானியத் தூதுவர் அககி சூடா, புனரமைப்புச் செய்யப்பட்ட கிளிநொச்சி பொது மருத்துவமனையை இன்று காலை 9 மணியளவில் திறந்துவைக்கவுள்ளார்.

கிளிநொச்சி பொது மருத்துவமனைக்கு மருத்துவ உபகரணங்களையும் அவர் அன்பளிப்புச் செய்வார்.

நேற்றுக்காலை யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்த அவர் பலதரப்பினருடனும் கலந்துரையாடல்களை மேற்கொண்ட பின் நேற்று மாலை கிளிநொச்சிக்கு சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (த)

# தொலைக்காட்சி நிலையம் தாக்கப்பட்டது

(வவுனியா)

வவுனியாவில் இயங்கி வந்த தனயார் தொலைக்காட்சி சேவை மீது இனம் தெரியாத நபர்கள் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

வவுனியாவில் மூன்று தொலைக்காடசி சேவைகள் நடைபெற்று வருகின்றன.இவற்றில் இரண்டு தமிழ் சேவையாகவும், ஒன்று ஆங்கில சேவையாகவும் நடத்தப்பட்டு வருகின்றது

இவற்றில் ஆங்கில சேவை நடத்தியவர்களின் ஒளிபரப்பு சாதனங்களை கடந்த வியாழக்கிழமை நள்ளிரவு இனம் தெரியாத நபர்கள் சேதமாக்கப்பட்டது.

# தேசிய மெய்வல்லுநர் போட்டி யாழ். அணி கொழும்பு செல்கிறது.

(கொழும்பு)

எதிர்வரும் 14,15,16ஆந் திகதிகளில் கொழும்பு சுகததாச விளையாட்டரங்கில் நடைபெறவுள்ள இளநிலை தேசிய மெய்வல்லுநர் போட்டிகளில் கலந்து கொள்ளும் யாழ். மாவட்ட மெய்வல்லுநர்கள் நாளை வியாழக்கிழமை யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்குப் புறப்படவிருக்கின்றனர்.

12,14,16,18,20 மற்றும் 23 வயதுக்குட்பட்ட வயதுப் பிரிவினரைக் கொண்ட 22வீரவீராங்கனைகள் மேற்படி போட்டிகளில் கலந்துகொள்ளவுள்ளனர். இவர்களுள் 16 ஆண்களும் 6பெண்களும் அடங்குகின்றனர். இவர்களுக்கான தொடர் பயிற்சிகள் கடந்த ஒரு மாதத்திற்கும் மேலாக யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் யாழ். மாவட்ட மெய்வல்லுநர் சங்கச் செயலாளர், யாழ்.மாவட்ட விளையாட்டதிகாரி மற்றும் யாழ். பிரதேச செயலக விளையாட்டலுவலர் ஆகியோரின் மேற்பார்வையின் கீழ் நடைபெற்று வந்தன.

யாழ். துரையப்பா விளையாட்டரங்க முன்றலிலிருந்து நாளை காலை 6.30 மணிக்குப் புறப்படும் மேற்படி அணிக்கு யாழ்மாவட்ட மெய்வல்லுநர் சங்கத் தலைவர் எஸ். மரியதாஸ் தலைமைதாங்கிச் செல்கின்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (த-68)

## பிரபாவைச்..

கள் மற்றும் சமாதானப் பேச்சுவார்த்தை ஆரம்பிக்க ஏற்றுக் கொளளப்பட வேண்டிய அடிப்படை விடயங்கள் என விடுதலைப் புலிகளால் முன்வைக்கப்பட்ட வரையறைகள் என்பன தொடர்பாக ஜோன் பீற்றர்சன் ஜனாதிபதிக்கு விளக்கிக் கூறினார்.

விடுதலைப் புலிகளால் முன் வைக்கப்பட்ட அடிப்படை விடயங்கள தொடர்பாக ஜனாதிபதியின் நிலைப்பாடு என்னவாக இருநதது என்பது பற்றித் தெரியவில்லை.

இதேவேளை நேற்று முன் தினம் கொழும்பு வருகை தந்திருந்த ஜோன் பீற்றர்சன் ஜனாதிபதி, பிரதமர் ஆகியோரைச் சந்தித்துப் பேசியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (த)

## அரசு- புலிகள்...

ஏற்றுக்கொண்டுள்ள தென்பதை புலிகளின் தலைவர் வே.பிரபாகரனிடம் தெரிவித்துள்ளேன்.

இடைநிறுத்தப்பட்டுள்ள சமாதான முயற்சிகளை மீண்டும் ஆரம்பிப்பதில் அரசும் விடுதலைப் புலிகளும் மிகவும் ஆர்வமும் மனப்பூர்வமான விருப்பமும் உள்ளவர்களாக இருப்பதை இருவருடனான சந்திப்பின் போது உணர்ந்து கொணடேன. எனினும் அரசும் புலிகளும் பல முக்கியமான விடயஙகளில் இன்னமும் இணக்கப்பாடு காண வேண்டியது அவசியமாக வுள்ளது. இந்நிலையில் எம்மாலான பங்களிப்பைச் செய்ய நாம் தயாராக இருக்கிறோம் என்று நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ளார். (ம)

## இலங்கையின்...

இலஙகையில் தொடரான பொருளாதாரசீரமைப்பு மற்றும் அபிவிருத்தி என்பவற்றை ஏற்படுத்தும் கடப்பாட்டை அமெரிக்கா கொணடுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது(த)

## புலிகள்-படையினர்...

இதில் இராணுவத்தரப்பின் சார்பில் 23ஆவது படைப்பிரிவின் கட்டளை அதிகாரி பிரிகேடியர் வஜிர விஜய குணவர்த்தனா, சிரேஷ்ட இராணுவ அதிகாரியான எஃபி. அமரதுங்கா, சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சமரதிவாகர, உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் உப்பிள் செனிவிரததினா ஆகியோர் கலந்து கொண்டனர் இச் சந்திப்பில் அண்மைக் காலமாக மட்டக்களப்பு- மாவட்டத்தில் இடம் பெற்ற கொலைச் சம்பவங்கள் குறித்து விரிவாக ஆராயப்பட்டது.

இச்சந்திப்பின் இறுதியில் கூட்டு அறிக்கை ஒன்று வெளியிடப்பட்டது. அதில் பாரதூரமான குற்றச் செயல்களைத் தடுப்பதற்கு துரித நடவடிக்கைகளை மேற்கொளளல், முக்கிய தகவல்களைப் பரிமாறிக் கொள்ள வழிவகைகளை ஏற்படுத்துதல், இருதரப்பு ஒத்துழைப்பைச் சீர்குலைக்கும் சக்தகளைத் தனிமைப்படுத்துதல் ஆகியவற்றில் இணக்கம் காணப்பட்டது. (உ-61,10)

## புலிகள் தரப்பு...

கலந்துகொண்டனர்.

இச் சந்திப்பையடுத்து இது தொடர்பாகப் பத்திரிகையாளர் மாநாடொன்றை கலாநிதி அனரன் பாலசிங்கம் நடததினார்.

அப் பத்திரிகையாளர் மாநாட்டில் அன்ரன் பாலசிங்கம் தெரிவித்ததாவது;

நேற்று இடம் பெற்ற இச் சந்திப்பில் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் தமது தரப்பு நிலைப்பாட்டை நோர்வே வெளிவிவகார அமைச்சருக்கு மிகத் தெளிவாக எடுத்துக் கூறியுள்ளார்.இதேபோல் சமாதானப் பேச்சுவார்த்தை தொடர்பில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவின் நிலைப்பாட்டினை அமைச்சர் ஜோன் பீற்றர்சன் பிரபாகரனிடம் எடுத்துக் கூறியுள்ளார்.

இந்நிலையில் விடுதலைப் புலிகளின் நிலைப்பாட்டிற்கும் அரசின் நிலைப்பாட்டிற்குமிடையிலான முரண்பாடுகள் களையப்பட்டு இணக்கம் காணப்பட வேண்டியது அவசியமாகும்.

**இந்தியாவை நட்பு நாடாகக் கருதுகின்றோம்.**

இந்தியாவைப் பொறுத்தளவில் நாம் அவர்களை நட்பு நாடாகவே கருதுகின்றோம். அவர்கள் இனப் பிரசசினைத் தீர்விற்கு உருப்படியான நடவடிக்கையை எடுக்க வேண்டும். இதனைவிடுத்து சிங்களப் பேரினவாதிகள் விடுதலைப் புலிகளுடன் இந்தியாவை மோதவிட்டு வேடிக்கை பார்ப்பதை நாம் அனுமதிக்க மாட்டோம்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா சமாதானப் பேச்சுவார்த்தையை விடுதலைப் புலிகளுடன் மட்டும் பேசுவதற்கு இணங்கியிருப்பதை நோர்வே வெளிவிவகார அமைச்சர், பிரபாகரனிடம் எடுத்துக் கூறியுள்ளார்.

இடைக்கால நிர்வாக சபை தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா பேசுவதற்குத் தயாராக இருந்த போதும். சிறிய தடங்கல் ஒன்றையும் அவர் வெளியிட்டுள்ளார்.

இந் நிலையில், மக்களிடம் இருநது கிடைக்கப் பெற்ற ஆணையின் பிரகாரம் முதலில் இடைக்கால நிர்வாக சபை பற்றியே பேச வேண்டுமெனறும் அதன் முடிபையடுத்து இடைக்கால நிர்வாக சபை அமைக்கப்பட்ட பின்னர் நிரந்தரத் தீர்வு பறறிப் பேசலாம் என்றும் பேச்சுவார்த்தைகள் பெரும்பாலும் ஐரோப்பிய நாடுகளில் நடைபெற வேண்டுமென்பதையும் ஜனாதிபதியிடம் தெரிவிக்குமாறு தலைவர் பிரபாகரன் நோர்வே வெளிவிவகார அமைச்சரிடம் தெரிவித்துள்ளதாக கலாநிதி அன்ரன் பாலசிங்கம் அப் பத்திரிகையாளர் மாநாட்டில் மேலும் தெரிவித்தார். (ம)




நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவிலில்

# பகிரங்க ஏல விற்பனை

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவிலில் பின்வரும் பொருட்கள் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும். பின்வரும் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்து பகிரங்க ஏலத்தில் பங்குபற்ற முடியும்.

1) மின் பிறப்பாக்கிகள். - இரண்டு
2) நீரிறைக்கும் இயந்திரம் - ஒன்று
3) படகிலிருந்து அகற்றப்பட்ட குளிர்சாதனப் பெட்டி - ஒன்று
4) படகிலிருந்து அகற்றப்பட்ட கூடாரம் - இரண்டு
5) குளிர்சாதனப் பெட்டி - ஒன்று
6) மோட்டார் படகு - ஒன்று 2 சிலிண்டர் **'YANMAR'** இயந்திரம், **30HP** நீளம் **32'**, அகலம் **10'** பயணிகள் அனுமதி - 80
7) சேலைகள் - பட்டுத்துணிகள் (அம்பாளுக்குச் சாத்தப்பட்டவை விலை மதிக்கப்பட்டுள்ளன)
8) குத்துவிளக்குகள், தீபவகைகள், சில்வர் சட்டிகள் (சிறியது)

**நிபந்தனைகள் :**

1) 1 தொடக்கம் 5 வரையான பொருட்களின் ஏலவிற்பனையில் கலந்து கொள்வோர் ரூபா இருநூறினையும், மோட்டார் படகு ஏலவிற்பனையில் கலந்துகொள்வோர் ரூபா ஐநூறினையும் மீளப்பெற முடியாத வைப்பாக ஆலயத்திற்குச் செலுத்தி பற்றுச் சீட்டுப் பெற்றுக் கொள்ள வேண்டும். ஏல விற்பனை 23.05.2004 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு இடம்பெறும்.
2) கேள்வித் தொகையின் **1/3** பங்கினை உடனடியாகச் செலுத்திப் பற்றுச் சீட்டுப் பெற்றுக் கொள்வதுடன் 30.05.2004க்கு முன் மிகுதித் தொகையினைச் செலுத்தி பொருட்களை பெற்றுக் கொள்ள முடியும்.
3) சேலைகள், பட்டுத் துணிகள் விலை மதிக்கப்பட்டுள்ளன. 16.05.2004 தொடக்கம் பார்வையிட்டுக் கொள்வனவு செய்ய முடியும்.
4) குத்து விளக்குகள், தீப வகைகள், சில்வர் சட்டிகளை (சிறியது) தெரிவு செய்து ஆலயங்கள், பொதுமக்கள் கொள்வனவு செய்யலாம்.
5) பொருட்களை அலுவலக நேரத்தில் நேரடியாகப் பார்வையிட முடியும்.

11.05.2004

**கு. சரவணபவானந்தன் ஜே.பி.**
செயலாளர்,
ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்,
நயினாதீவு.

(C-176)



# மாநகரசபை, யாழ்ப்பாணம்

## விளையாட்டு மைதானப் பராமரிப்பிற்கான புல்வெட்டும் இயந்திரம் வழங்குநர்களைக் கோரல்

மேற்படி பராமரிப்பு வேலைக்குத் தேவையான புல்வெட்டும் இயந்திரங்களை யாழ்.மாநகர சபைக் களஞ்சியத்திற்கு விரைவாகக் கொண்டு வந்து வழங்கக் கூடியவர்கள் கூறுவிலைப் படிவங்களை தாங்களே தயாரித்து இயந்திரங்களின் தேவையான சகல தகவல்களும் அடங்கிய படங்களுடன் விண்ணப்பித்தல் வேண்டும். விண்ணப்பங்கள் யாவும் 20.05.2004ம் திகதி முற்பகல் 12.00 மணிக்கு முன்னர் 'ஆணையாளர், மாநகர சபை,யாழ்ப்பாணம்' என்னும் முகவரிக்கு நேரிலோ அல்லது பதிவுத் தபாலிலோ அனுப்பி வைக்கப்படல் வேண்டும். கிடைக்கப்பட்ட கூறுவிலைகள் 21.05.2004ஆம் திகதி பிற்பகல் 3.00 மணிக்கு ஆணையாளர் அலுவலகத்தில் திறக்கப்படும்.

படிவம்

| இயந்திர விபரம் | உற்பத்தி நாடு | இயந்திர வலு | வேறு விடயம் | ஒன்றின் விலை |
|---|---|---|---|---|
| | | | | |

**இ. இராமலிங்கம்**
மாநகர ஆணையாளர்,
மாநகரசபை,
யாழ்ப்பாணம்.

திகதி:11.05.2004

[C-175]


இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 12.05.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.